வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 21.04.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 133 | பக்கங்கள் : 16




# மக்கள் உரிமைகளை காக்கவே பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம்!

## அமெரிக்காவுக்கு நீதியமைச்சர் இப்படி விளக்கம்!

கொழும்பு, ஏப். 21

மனித உரிமைகள் மீறப்படு வதற்கான சந்தர்ப்பங்கள் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தில் இல்லை. மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவ தற்காகவே புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் தயாரிக் கப்பட்டுள்ளது என்று நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீர மைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கை அமைச்சர் சந்தித்துப் பேசினார். இதன் போதே மேற்படி விளக்கத்தை அளித்தார் என்று அவரின் அமைச்சு வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நாட்டில் தற்போது 15



# சர்வதேச தரத்துக்கு புறம்பானது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்

## அமெரிக்க தூதுவர்

கொழும்பு, ஏப். 21

பயங்கரவாத எதிர்ப்பு சட் டம் சர்வ தேச தரத்துக்கு புறம்பானது. இது தொடர்பில் பாராளுமன்ற விவாதங்கள் அவசியம் என்று நீதி அமைச் சர் விஜய தாஸ ராஜபக்ஷவிடம் அமெரிக்க தூது வர் வலியுறுத்தியுள்ளார்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் மக் களை பாதுகாப்பதற்கானது என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அவரு டனான சந்திப்பில் விளக்க மளித்திருந் தார். அரசு மக்களைப் பாதுகாக்க எடுத் துள்ள நடவடிக்கைகளை அவர் பாராட்டினார் என்று நீதி அமைச்சு செய்தி குறிப்பு வெளியிட்டது. 15

ஐ. எம். எவ். - அரசு ஒப்பந்தம் குறித்த

# பாராளுமன்ற விவாதத்தை எதிர்கட்சிகள் புறக்கணிக்கும்?

கொழும்பு, ஏப். 21

அரசாங்கம் - சர்வதேச நாணய நிதியம் என்ப வற்றுக்கு இடையிலான ஒப்பந்தம் குறித்த பாராளு மன்ற விவாதத்தை தமிழ் கட்சிகள் உள்ளிட்ட எதிர்க் கட்சிகள் புறக்கணிக்கலாம் என்று அறிய வருகின் றது.

இந்த ஒப்பந்தம் குறித்து எதிர்வரும் 26, 27, 28 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள பாராளுமன் றத்தில் மூன்று நாள் விவாதம் நடைபெறவுள்ளது.

இதில், சர்வதேச நாணய நிதியத்துடன் கைச்சாத் திடப்பட்ட ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப் பிப்பதில், அரசாங்கம் மொழி உரிமையை மீறியுள் ளது. இதைக் கண்டித்தும் அனைத்து மக்க ளின் மொழி உரிமையை பாதுகாக்கும் 15

# பயங்கரவாத சட்டம் ஊடாக சர்வாதிகாரம் தலைதூக்கும்!

## இடமளிக்க முடியாது என்கிறார் சஜித்!

கொழும்பு, ஏப்ரல் 21

**பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் ஊடாக சர்வாதிகாரத்தை தலை தூக்கச் செய்வதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. இதற்கு எதிராக நாட்டிலுள்ள அனைத்து சக்திகளையும் ஒன்றிணைத்து மக்களின் உரிமைகளை முடக்கும் முயற்சிகளை முறியடிப்போம் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

நேற்று அவர் விடுத்த விசேட அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள் ளார்.

மேலும், புதிய பயங் கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்துக்கு எதிராக செயல்படுவதற்கு அனை வரும் தயாராகிக் கொண் டிருக்கின்றனர். இது மிகவும் அபாயம் மிக்க சட்ட மூலம் என்று மல் வத்து பீடம் தெரிவித்துள் ளது.

அரச பயங்கரவாதத் தின் ஊடாக மக்களின் ஜனநாயக உரிமையை சீரழிப்பதே இந்த அர சாங்கத்தின் நோக்கமா கும். அரசாங்கத்தின் இந்த மிலேச்சத்தனமான நடவடிக்கைகளைக் கட் டுப்படுத்துவதற் காக அனைத்து 15

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை எதிர்த்து வட, கிழக்கில் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஏப். 21

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கவனவீர்ப்பு போராட் டங்கள் நடைபெற்றன.

வடக்கு, கிழக்கு பெண் கள் ஒன்றியத்தின் அழைப்பின்பேரில் இந் தப் போராட்டம் நடை பெற்றது.

வடக்கில், யாழ்ப் பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட் டங்களில் நேற்று வியா ழக்கிழமை ஆர்ப்பாட் டங்கள் முன்னெடுக்கப் பட்டன.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை கொண்டு வரும் முயற்சி, உடனே கைவிடப் 15

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் 4ஆம் ஆண்டு நினைவு இன்று!

கொழும்பு, ஏப். 21

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் நான்கா வது ஆண்டு நினைவுதினம் இன்றாகும்.

இதையொட்டி நாடு முழுவதும் உள்ள தேவால யங்களில் குண்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட வர்கள், பாதிக்கப்பட்டவர்களுக்காக சிறப்பு வழி பாடுகள் நடைபெறவுள்ளன. தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்காக தாக்குதல் நடந்த 15

# தேசிய அரசே தீர்வெனில் பொதுஜன பெரமுன ஏற்கும்!

## சஞ்சீவ எதிரிமன்னே எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 21

நல்லாட்சியின் தேசிய அரசாங்கத்தை போல் மீண்டும் ஒரு தேசிய அர சாங்கம் தோற்றம் பெறக் கூடாது. தேசிய அரசாங் கத்தில் பொறுப்பு கூறும் தரப்பு ஓர் அதிகாரத்தை மையப்படுத்தியதாக காணப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள் ளோம் என சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளு மன்ற உறுப்பி னர் சஞ்ஜீவ எதிரி மன்னே 15

# சஜித்தை பிரதமராக்குவதே சிறந்த தீர்வுக்கான வழி!

## ராஜித சேனாரத்ன எம். பி.

கொழும்பு, ஏப். 21

சஜித் பிரேமதாஸவை பிரதமராக நியமிப்பதே தற்போதைய நிலைமைக்கு சிறந்த தீர்வு என்று ஐக் கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரி வித்துள்ளார்.

எதிர்வரும் 25ஆம் திகதி தேசிய அரசாங்கத் திற்காக ஜனாதிபதி முன் வைக்கும் பிரேரணை சரியான பயணத்துக்கு சரியான முறையில் முன்வைக்கப்படுமாயின், தான் அதனுடன் இணைந்து நிற்பார் என் றும் கூறினார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே 15

# இந்தியாவை உளவு பார்ப்பதற்கு இலங்கையிலிருந்து சென்ற புறா?

## தமிழ்நாடு ஊடகங்கள் தகவல்

சென்னை, ஏப். 21

நடுக்கடலில் மீனவர்க ளால் மீட்கப்பட்ட புறா பாக்கு நீரிணை பகுதியில் இந்திய கடற்படை ரோந்து கப்பலின் நடமாட்டம், கடல் பாதுகாப்பு குறித்து உளவு பார்க்க யாழ்ப்பா ணத்திலிருந்து அனுப்பப் பட்டதாக இருக்கலாம் என்று தமிழ்நாடு ஊட கங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன.

ஆனால், இதனி டையே அந்தப் புறாவின் உரிமையாளர் என்று கூறு பவர் இந்தத் தகவலை மறுத்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. 15

# இந்திய கண் மருந்து பாவனையை உடனடியாக நிறுத்துமாறு உத்தரவு!

## சுகாதார அமைச்சு விடுத்தது

கொழும்பு, ஏப். 21

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பிரெட்னிசலோன் (Prednisolone) கண் சொட்டு மருந்துகளை உடனடி யாக பயன்பாட்டிலிருந்து நீக்குமாறு சுகாதார அமைச்சு அனைத்து மருத்துவமனைகளின் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளது.

கண் சத்திர சிகிச்சை யின் பின்னர் பயன்படுத் தப்படும் இந்த சொட்டு மருந்தை பயன்படுத்திய ஒருவருக்கு தொற்று ஏற் பட்டதையடுத்து மட்டக்களப்பு 15

## இப்படியும் நடக்கிறது...!

பிரபல நடிகர் விஜய் நடித்த படம் ஒன்றில் வரும் காட்சி ஒன்று இப்போது ஞாபகத்துக்கு வருகின்றது.

அமெரிக்காவில் பிரபல தொழில் அதிபரான அவர் தமிழ்நாட்டில் நடக்கும் சட்ட சபைக்கான தேர்தலில் தனது வாக்கைச் செலுத்துவதற்காக தமிழகம் வந்திருப்பார்.

வாக்களிப்பு நிலையத்திற்கு வாக்களிக்க அவர் சென்றபோது அவரது வாக்கை யாரோ அவருக்கு முதலே செலுத்திவிட்டிருப்பார்கள்.

அவர் கோபத்துடன் சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக ஒரு காரில் போய்க் கொண்டிருப்பார். அப்போது அந்த கார் சாரதி ஒரு கட்டிடத்தைக் கடந்து செல்லும்போது சொல்லுவார், 'இங்கதான் சேர், போன வாரம் ஒரு குடும்பத்தினர் ஒரு கோரிக்கையை முன்வைத்து மண்ணெண்ணெயை ஊற்றி தீக்குளித்து தற்கொலை செய்யமுயன்றனர்' என்று நடந்த கொடுமையான சம்பவம் ஒன்றை விவரிப்பார். அப்போது விஜய், 'அப்ப நீங்களெல்லாம் என்ன செய்தீர்கள். பார்த்துக் கொண்டிருந்தீர்களா?' என்று ஆச்சரியமாகக் கேட்பார்.

அதற்கு அந்த சாரதி சொல்லுவார், 'இல்லை சேர், நாங்கள் எல்லோரும் சமூக வலைத்தளங்களில் அதுபற்றியே பேசினோம். அது பற்றித்தான் தமிழகம் முழுவதும் உள்ளவர்கள் தமது சமூக வலைத்தளங்களில் கண்டித்துக் கொண்டிருந்தார்கள்..' என்பார்.

'அப்புறம்...' என்று விஜய் கேட்பார்.

அதற்கு அந்த சாரதி சொல்லுவார், 'அப்புறம் என்ன சேர்... புதுசா ஒரு பிரச்னை வரும் நாங்கள் எல்லாம் அதைப் பற்றி பேசத் தொடங்கிவிடுவோம்...'

கன்னியா வெந்நீரூற்று பகுதியிலிருந்த இந்து ஆலயத்தை மீளக்கட்டுவதற்காக அதன் உரிமையாளர்கள் முயன்றபோது தொல்லியல் திணைக்களம் தடையாக நின்றது. அது அங்கே மிகப் பெரிய அதிர்வலையை ஏற்படுத்தியது. விசயம் திருமலை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அத்தோடு அதன் கதை முடிந்துவிட்டது. அதேபோலத்தான், வரலாற்று புகழ்பெற்ற - பாடல் பெற்ற திருத்தலமான திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் வாயிலில் இருந்த வளைவு சிலரால் இடித்து அழிக்கப்பட்டது. அதனையும் நீதிமன்றம் மூலம் தீர்க்கலாம் என்று நமது தலைவர்கள் நீதிமன்றில் ஆஜரானார்கள். இப்போது நீதிமன்றத்தில் வழக்கு திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு பாதகமாக தீர்ப்பு சொல்லப்பட்டு விசயம் முடித்து வைக்கப்பட்டுவிட்டது.

இப்படியே ஒவ்வொரு விடயங்களும் 'முடித்து' வைக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. வெடுக்குநாறி மலை ஆதிசிவனை இப்போது நம்மவர்கள், தலைவர்களும்தான் மறந்தே விட்டார்கள்.

இப்போது நம்மவர்களின் பேசு பொருள் பண்ணை நாக அம்மன் சிலை விவகாரம். அதுவும் பழையவை போலவே கடந்து சென்று விடும்.

நமது கவனம் புதிதாகக் கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிராகவும் திரும்பியிருக்கின்றது.

ஒவ்வோர் அமைப்பும் கட்சியும் தத்தமது இருப்பை வெளிக்காட்ட ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் நடத்திக் கொண்டிருக்க, போதாக் குறைக்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் 'பாசத்துக்கான யாத்திரை' நாட்டின் பல பாகங்களிலுமிருந்து ஆரம்பமாகியிருக்கின்றது. அதில் ஒன்று நல்லூரிலிருந்து ஆரம்பமானபோது நமது பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனையும் அங்கே காணமுடிந்தது.

அந்த யாத்திரையில் கலந்துகொண்ட அவர், நாட்டில் உள்ள சகல இனங்களும் வெவ்வேறு எண்ணிக்கையில் காணப்பட்டாலும் அரச அதிகாரங்களை சமநிலையில் கையாளக்கூடிய ஆட்சிமுறையே அவசியம் என வலியுறுத்தினார்.

வடக்கு, கிழக்குக்கு சமஷ்டி கோரி போராடி முடிந்துவிட்டது. இனி அரச அதிகாரங்களை சமநிலையில் கையாளக்கூடிய ஆட்சி முறைக்காக போராட தொடங்கியிருக்கிறோமோ?

முதலில் அந்த யாத்திரையை ஏற்பாடு செய்யும் கட்சித் தலைவர் பதின் மூன்றை முழுமையாக அமுல்படுத்துவதற்கே தயாராக இருக்கிறாரா என்று கேட்டு அறிந்துகொள்ளவேண்டும். அவர் தனது ஆட்சியில் ஒரு சில அமைச்சுகளை வழங்க சிலவேளை தயாராக இருக்கலாம். ஆனால், அது அதிகாரங்களை கையாக்கூடியதாக இருக்குமா என்பதையும் அவரிடம் கேட்டு அறிய வேண்டும்.!

- ஊர்க்குருவி

# செல்வச்சந்நிதி - கதிர்காமம் பாதயாத்திரை மே 27 ஆரம்பம்

கொழும்பு, ஏப். 21

வரலாற்று பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி- கதிர்காமம் நீண்ட பாத யாத்திரை எதிர்வரும் மே மாதம் 27ஆம் திகதி ஆரம்பமாக இருக்கிறது என்று பாதயாத்திரை குழுவின் தலைவர் ஜெயாவேல் சாமி தெரிவித்தார்.

சந்நதி கதிர்காமம் பாத யாத்திரைக் குழுவின் ஏற்பாட்டில் 22ஆவது வருடமாக இப் பாத யாத்திரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது .

எதிர்வரும் மே 27 அதிகாலை விசேட பூசையுடன் யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து பாதயாத்திரை ஆரம்பமாகும்.

இம்முறை பாத யாத்திரையில் கலந்து கொள்வோர் கட்டாயம் சமய ஆசார முறைப்படி கலந்து கொள்ள வேண்டும்.

21 வயதுக்கு மேற்பட்ட ஆண் கள் வேஷ்டியோடும் 45 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் காவி சாறியுடனும் கலந்து கொள்ள வேண்டும். செல்லும் வழியில் உள்ள ஆலயங்களில் பஜனை மற்றும் சிரமதானத்தில் பங்கு கொள்ளவேண்டும்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் 45 வயதுக்கு உட்பட்ட பெண்கள் எக்காரணம் கொண் டும் இணைத்துக் கொள்ளப்பட மாட்டார்கள் என்று ஜெயாவேல் சாமி மேலும் கூறினார்.

55 நாள் நீண்ட இப் பாத யாத் திரையில் பங்குபற்ற விரும்பும் அடியார்கள் அல்லது உதவி செய்ய விரும்பும் தனவந்தர்கள் 0778386381 அல்லது 0763084791 அல்லது 0776139932 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட் கப்பட்டுள்ளார்கள்.

இதுவரை 85 அடியார்கள் தங்கள் பெயர் விவரங்களை பதிவு செய்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# 1/2 மணிநேரத்துக்கு ஒருமுறை 250 மி.லீ. நீர் அருந்தவேண்டும்!

கொழும்பு, ஏப். 21

கடும் வெப்பத்துடனான காலநிலையால் அரை மணித்தியாலத்திற்கு ஒருமுறை 250 மில் லிலீற்றர் நீர் அருந்த வேண்டும் என சுகாதாரத் துறை பொது மக்களை கோரியுள்ளது.

இதன்மூலம் நீரிழப்பு உள்ளிட்ட நோய் நிலைமைகளை தடுக்க முடியும் என விசேட வைத்தியர் ரஞ்சித் பட்டுவன்து டாவ தெரிவித்தார்.

மதிய நேரங்களில் தாகம் எடுப்பதற்கு முன்னதாக நீரை அருந்த வேண்டும்.

அத்துடன் அதிகளவான நீரை பருக வேண்டும்.

இதுதவிர, நீர்ச்சத்து குறைப் பாடு ஏற்படுமாயின் அதனை இலகுவாக இனங் காண முடியும்.

வெளியேறும் சிறுநீரின் நிறம் தொடர்பில் அவதானத் துடன் செயற்படவேண்டும்.

அதேநேரம், பொது வெளியில் பணிபுரிபவர்கள் தலைக்க வசம் போன்ற பாதுகாப்பு அங்கிகளை அணிவது சிறந்த விடயம் என விசேட வைத்தியர் ரஞ்சித் பட்டுவன்துடாவ அறிவுறுத்தியுள்ளார். (அ)

# அமெரிக்க நிறுவனமொன்றின் 8 கணக்குகளை நிறுத்த உத்தரவு

கொழும்பு, ஏப். 21

"ஒன்மக்ஸ் டிரி" என்ற நிறுவனத்தில் பணத்தை வைப்பிலிட்டுள்ள அமெரிக்காவில் அமைந் துள்ள நிதி நிறுவனம் ஒன்றின் 8 கணக்குகளை 6 மாதங்களுக்கு உடனடியாக இடைநிறுத்துமாறு கொழும்பு நீதிவான் பிர சன்ன அல்விஸ் உத்தரவு பிறப் பித்துள்ளார்.

அமெரிக்காவின் **"Binance.com"** என்ற நிதி நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை நீதிமன்றத்தினால் அமெரிக்க நிதி நிறுவனமொன்றுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட் டுள்ளமை இதுவே முதல் தடவை என மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

இடைநிறுத்த உத்தர விடப் பட்ட கணக்குகளில் இலங்கை "ஒன்மக்ஸ் டிரி" தனியார் நிறுவனத்தின் நான்கு பணிப்பாளர்களின் கணக்குகளும் அடங்குகின்றன. மேலும் அந்த நான்கு பேர் உட்பட அந்த நிறுவனத்தின் ஆறு பணிப்பாளர்களின் வெளிநாட்டு பயணத்தைத் தடைசெய்தும் நீதிமன்றம் உத் தரவு பிறப்பித்துள்ளது.

இந்த "ஒன்மக்ஸ் டிரி" நிறுவ னத்தின் இரண்டு கணக்குகள் தொடர்பாக இருவரது வாக்கு மூலங்களை பதிவு செய்துள்ள தாக நீதிமன்றுக்கு அறிவித்த குற்றப் புலனாய்வுத் திணைக்க ளம், அதன்போது முன்வைத்த கோரிக்கையை கருத்திற் கொண்டு அவர்கள் இருவரின் கைத்தொலைபேசிகள் மற்றும் கணினிகளை, கணினி அவசர கால பதிலளிப்பு நிறுவகத்தி டம் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

"ஒன்மக்ஸ் டிரி" நிறுவனம் இலங்கையில் பரிவர்த்தனைகளுக்கு பயன்படுத்திய இலங்கையின் ஐந்து வங்கிகளில் சம்பந் தப்பட்ட நிதி நிறுவனத்தின் பெயரில் உள்ள 57 கணக்கு களை இடைநிறுத்த கடந்த 28ஆம் திகதி உத்தரவு பிறப்பிக் கப்பட்டிருந்தது.

சட்டவிரோத பிரமிட் பரிவர்த்தனைகளில் இந்த நிறுவனம் பயன்படுத்திய தொகை 10 கோடி அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. (அ)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் வேண்டாம்!

அக்கரைப்பற்று, ஏப். 21

இலங்கையில் புதிதாக கொண் டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை, வேண் டாம் என்று கோரி வடக்கு-கிழக்கு பெண்கள் கூட்டு என்ற அமைப்பு நேற்று வியாழக்கிழ மை மாபெரும் எதிர்ப்பு ஆர்ப் பாட்டப் பேரணியை நடத்தியது.

அம்பாறை மாவட்டத்தின் மத்திய முகாமில் உள்ள நான் காம் கிராமம் பாமடி என்ற பிரதேசத்தில் இந்தப் போராட் டம் நடைபெற்றது .

## மத்திய முகாமில் பெண்கள் ஆர்ப்பாட்டம்




அதன்போது அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த இந்த கூட்டு முன்னணியின் சுமார் 300 பெண்கள் மும்மொழிகளிலுமான சுலோகங்கள் பொறித்த பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

ஈழநாடு
Eelanadu
21.04.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், சித்திரை 08

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# காலத்தைத் தவறவிட்டால்?

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் மீண்டும் பாத யாத்திரையில் ஈடுபடவுள்ளன. கடையடைப்புக்கு அழைப்பு விடுத்திருக்கின்றன. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தேசிய கவியாக அடையாளம் காணப்பட்ட புதுவை இரத்தினதுரையின் கவிதை வரியொன்றுண்டு – அதாவது, "காலத்தை தவறவிட்டால் கண்டவனெல்லாம் கதவை தட்டுவான்", புதுவை எதையெண்ணி இந்த வரிகளை எழுதினாரோ – ஆனால், இது ஈழத் தமிழர் அரசியலுக்கு அச்சொட்டாக பொருந்திப் போகின்றது. ஆனால், இந்த வரிகளில் இப்போது ஒரு சிறிய திருத்தம் செய்ய வேண்டியிருக்கின்றது. அதாவது, காலத்தைத் தவறவிட்டால் கண்டவரின் கதவையெல்லாம் தட்ட வேண்டிவரும். தமிழ் மக்களின் இன்றைய நிலை இதுதான். ஆனால், இப்போதும்கூட, தமிழ் தேசியத்தை கட்சிகளின் பெயர்களில் வைத்திருப்பவர்கள் திருந்துவதாகத் தெரியவில்லை.

தமிழ் மக்கள் கோருவதை சிங்கள ஆட்சியாளர்கள் செய்யப் போவதில்லை. ரணில் – மைத்திரி ஆட்சிக் காலத்தில் அவ்வாறானதொரு ஜெகோவாவின் அற்புதம் நிகழ்ந்துவிடுமென்று சம்பந்தன் மற்றும் சுமந்திரன் நம்பியிருந்தனர். அவ்வாறான நம்பிக்கையை மக்களுக்குள்ளும் விதைத்தனர். ஆனால், இறுதியில் அனைத்து நம்பிக்கைகளும் புஸ்வாணமாகின. இலங்கை சுதந்திரமடைந்ததாக சொல்லப்படும் காலத்திலிருந்து தமிழர்களால் முன்னெடுக்கப்பட்ட எந்தவொரு நகர்வும் வெற்றியளிக்கவில்லை. மிதவாதிகளால் முடியாதென்னும் கோஷத்துடன்தான் ஆயுத இயக்கங்கள் தோற்றம் பெற்றன.

இந்தியாவின் பயிற்சியின் மூலம் ஆயுத இயக்கங்கள் சடுதியாக வளர்ச்சியடைந்தன. உண்மையில், விடுதலைப் புலிகளை தங்களின் பயற்சித் திட்டத்தில் இணைத்துக் கொள்ளும் நோக்கம் ஆரம்பத்தில் இந்தியாவிடம் இருந்திருக்கவில்லை. ஆனால், அந்த பயிற்சித் திட்டத்துக்குள் எப்படியாவது தாங்களும் இடம்பெற வேண்டுமென்று பிரபாகரன் பிடிவாதமாக நின்ற கதைகள் பற்றி விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தத்துவ ஆசிரியராக அறியப்பட்ட, அன்ரன் பாலசிங்கம் தனது 'போரும் சமாதானமும்' நூலில் விபரித்திருக்கின்றார். இதிலிருந்து இந்தியா விடுதலைப் புலிகளை நோக்கி வரவில்லை, விடுதலைப் புலிகள் அமைப்புத்தான் இந்தியாவை நோக்கி சென்றதென்னும் உண்மை தெளிவாகின்றது.

ஈழத் தமிழ் அரசியல் கட்சிகள், இயக்கங்கள் எவற்றாலும் தனித்து இலங்கையை எதிர்கொள்ள முடியாதென்னும் நிலையில்தான் இந்தியாவின் தலையீடு நிகழ்ந்தது. இந்தியாவின் தலையீட்டின் பின்னர்தான் அதுவரையில் வெறும் பேச்சுகளாகவும் கிழித்து வீசப்பட்ட உடன்பாடுகளாகவும் கழிந்து சென்ற தமிழர்களின் அரசியல் வாழ்வில் ஒரு புதிய பாய்ச்சல் ஏற்பட்டது. இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் ஒரு தீர்வை எட்டும் வாய்ப்புக் கிடைத்தது. முன்னைய ஒப்பந்தங்களைக் கிழித்து வீசியது போன்று இதனை சிங்கள ஆட்சியாளர்களால் கையாள முடியவில்லை. கையாளவும் முடியாது. இன்று திரும்பிப் பார்த்தால், தமிழ் அரசியல் வரலாற்றில் நின்று நிலைக்கும் ஒரேயொரு விடயமாக இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் விளைவான மாகாண சபை முறைமை மட்டும்தான் நம்மிடம் இருக்கின்றது. நமக்கு முன்னால் எது எஞ்சியிருக்கின்றதோ – அதுதான், நமக்கு முன்னாலுள்ள வாய்ப்பாகும். அதுதான் நமது இதுவரைகால அரசியல் அறுவடையாகும். அந்த வாய்ப்பை எந்தளவுக்கு நம்மால் பயன்படுத்திக் கொள்ள முடிகின்றதென்பதைப் பொறுத்தே நமது எதிர்காலம் தீர்மானிக்கப்படும்.

இன்று தமிழர் அரசியலை திரும்பிப் பார்த்தால் கடந்த காலத்தைக் கையாளத் தவறியதன் விளைவுகளையே நாம் எதிர்கொண்டிருப்பதை காணலாம். இந்தப் படிப்பினையிலிருந்து கற்றுக் கொள்ளும் எண்ணமிருந்தால் மட்டுமே தமிழர் வாழ்வில் சிறு விளக்கையாவது ஏற்றிவைக்க முடியும். இல்லாவிட்டால், தென்னிலங்கையின் செயல்பாடுகளுக்கு எதிர்வினையாற்றுவதிலேயே எங்கள் காலம் ஓடிக்கொண்டிக்கும். இறுதியில் தமிழ் மக்கள் கடைநிலை சிறுப்பான்மையாகும் நிலைமை உருவாகும்.

# குண்டு தாக்குதல் எச்சரிக்கையும் பள்ளிவாசலுக்கு பாதுகாப்பும்!

நாட்டில் மீண்டுமொரு தாக்குதல் நடைபெற போவதாக வந்த புலனாய்வு தகவலின் காரணமாக அக்குரணை பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த தகவலின் உறுதித்தன்மை குறித்து ஆராய்ந்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

**நடந்தது என்ன?**

கண்டி மாவட்டத்தின் அக்குரணை பகுதியிலுள்ள பள்ளிவாசல் நிர்வாகத்துடன், பொலிஸ் உயர் அதிகாரிகள் நேற்று முன்தினம் மாலை விசேட கலந்துரையாடலொன்றை நடத்தியுள்ளனர்.

இந்த கலந்துரையாடலின் போதே, குண்டுத் தாக்குதல் நடத்தப்படவுள்ளமை தொடர்பில் பொலிஸ் தமக்கு அறிவித்ததாக அக்குரணை பள்ளிவாசல் தலைவர் சட்டத்தரணி அஸ்மீன் பாரூக், பிரதேச மக்களுக்கு அறிவித்திருந்தார்.

ரமழான் பெருநாள் காலப் பகுதியில் குண்டு வெடிப்பு தாக்குதல் ஒன்று நடத்தப்படலாம் என புலனாய்வு தகவல் கிடைத்துள்ளதாகவும் பொலிஸ் உயர் அதிகாரிகள் தமக்கு அறிவித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

தாக்குதல் நடத்தப்படுவதை தவிர்க்கும் வகையில் வீதி தடைகளை ஏற்படுத்துவதாகவும் பொலிஸார் பள்ளிவாசல் நிர்வாகத்துக்கு அறிவித்துள்ளனர்.

அதேபோன்று, ரமழான் காலப் பகுதி என்பதனால், மக்களை அவதானத்துடன் செயல்படுமாறும் பொலிஸார் பள்ளிவாசல் நிர்வாகத்துக்கு அறிவித்துள்ளனர்.

இதையடுத்து, பொலிஸாரின் அறிவிப்பு தொடர்பில் பள்ளிவாசல் நிர்வாகம் மிக நீண்ட கலந்துரையாடலொன்றை நடத்தியுள்ளது.

இந்த கலந்துரையாடலை அடுத்து, பள்ளிவாசல் தலைவரினால், சமூக வலைத்தளங்களில் பகிரும் விதத்திலான குரல் பதிவொன்று அனுப்பி வைக்கப்பட்டது.

இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட குரல் பதிவை, அனைத்து தரப்பினருடனும் பகிர்ந்து கொள்ளுமாறு பள்ளிவாசல் தலைவர், மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்துடன், தமது கட்டளைகளை மீறி பயணிக்கும் வாகனங்கள் மீது துப்பாக்கி சூடு நடத்துவதற்கான அனுமதியுள்ளதாகவும் பொலிஸார் பள்ளிவாசல் நிர்வாகத்துக்கு அறிவித்துள்ளனர்.

பெண்கள் மற்றும் சிறார்கள் அதிகளவில் ஒன்று கூடுவதை தவிர்த்துக்கொள்ளுமாறும் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

முஸ்லிம் பெண்களை பரிசோதிக்க முடியாது என்ற நிலையில், அபாயா போன்ற ஆடைகளை அணிந்து ஆண்கள் உள்ளே வருவதற்கான சாத்தியம் உள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இதேவேளை, அவசர ஊர்தி வாகனங்களை தயார் நிலையில் வைத்துக்கொள்ளுமாறு பொலிஸார், மருத்துவர் ஒருவரை பள்ளிவாசலுக்கு அழைத்து வந்து அறிவித்ததாகவும் அக்குரணை பள்ளிவாசல் தலைவர் சட்டத்தரணி அஸ்மீன் பாரூக் குறிப்பிட்டார்.

**பொலிஸாரின் பதில்**

அக்குரணை பகுதியில் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் பி.பிசி தமிழ், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவவிடம் வினவியது.

""எங்களுக்கு கிடைக்கப் பெற்ற தகவலை அடிப்படையாகக் கொண்டே, நாம் அக்குரணை பகுதியில் அவ்வாறான அறிவிப்பை விடுத்திருந்தோம். தற்போதும் அந்த பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்த தகவலின் உண்மை தன்மை தொடர்பில் விசாரணைகளை நடத்தி வருகின்றோம்." என அவர் பதிலளித்தார்.

நாட்டின் ஏனைய பகுதிகளின் பாதுகாப்பு தொடர்பிலும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கருத்து தெரிவித்தார்.

""நாட்டின் ஏனைய பகுதிகளில் வழமை போன்று பாதுகாப்பு காணப்படுகின்றது. இந்த பகுதி தொடர்பில் தகவலொன்று கிடைத்தமையினாலேயே, இந்த பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது."

இலங்கையிலுள்ள மூன்று கிறிஸ்தவ தேவாலயங்கள் உள்ளிட்ட நட்சத்திர ஹோட்டல்கள் மீது 2019 ஏப்ரல் 21ஆம் தேதி தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதல் நடத்தப்பட்டு, இன்றுடன் நான்கு வருடங்களாகின்றன.

கொச்சிகடை முதல் கடுவாபிட்டி வரை 21ஆம் திகதி மக்கள் கூட்டம்

ஈஸ்டர் தாக்குதலுக்கான உண்மை மற்றும் நியாயத்தை கோரி, இன்றைய தினம் வலுவான மக்கள் கூட்டமொன்றை கூட்டுவதற்கு கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.


இன, மத வேறுபாடின்றி, அனைத்து மக்களையும் இந்த மக்கள் கூட்டத்தில் இணைந்துக்கொள்ளுமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்ட 21ஆம் திகதி (இன்று) பெருவாரியான மக்கள் கூட்டமொன்றை இணையுமாறு கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அழைப்பு விடுத்துள்ளார் இதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் எவ்வாறு காணப்படும் என்பது தொடர்பிலும் பி. பி. சி. தமிழ், பொலிஸ் ஊடகப் பேச்சாளரிடம் வினவியது.

கத்தோலிக்க மக்கள் இருக்கின்ற மற்றும் இந்த மக்கள் கூட்டம் கூடுகின்ற பகுதிகளில் அந்த பகுதிக்கு பொறுப்பாக உயர் பொலிஸ் அதிகாரியின் தீர்மானங்களுக்கு அமைய, பாதுகாப்பு வழங்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

நன்றி : பி. பி. சி. தமிழ்

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு

ஏப்ரல் - 21 வெள்ளிக்கிழமை
சுபகிருது வருடம் - சித்திரை 08
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : துவிதியை




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் எதையோ இழந்ததைப் போல் கவலைகள் வந்து போகும். வாடிக்கையாளர்களிடம் கவனமாக பழகுங்கள். அதிகாரிகள் வளைந்து கொடுத்துப் போவது நல்லது.

**இடபம்**
குடும்பத்தினருடன் வீண் விவாதங்கள் வந்து போகும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். சக ஊழியர்களால் நிம்மதி இழப்பீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கும். உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். புகழ் கௌரவம் கூடும் நாள்.

**கடகம்**
சின்ன சின்ன சந்தர்ப்பங்களையும் வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வீர்கள். வியாபாரத்தில் லாபம் வரும். உங்களின் திறமை களை மேலதிகாரி வியப்பார். சாதிக்கும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் மறைமுக விமர்சனங்களும் எதிர்ப்புகளும் வந்து நீங்கும். ரகசியங்களை வெளியிட வேண்டாம். சக ஊழியர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம்.

**துலாம்**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயமடைவீர்கள். திறமை வெளிப்படும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**தனுசு**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். புது தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். புதுமை படைக்கும் நாள்.

**மகரம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**கும்பம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். வெற்றி பெறும் நாள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். இழந்த உரிமையை பெறுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

# அ. தி. மு. க. பொதுச் செயலராக பழனிசாமி அங்கீகரிக்கப்பட்டார்

## இரட்டை இலை சின்னமும் அவருக்கு சொந்தமானது

புதுடில்லி, ஏப். 21

அ. தி. மு. க. பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமியை இந்திய தலைமைத் தேர்தல் ஆணையம் அங்கீகரித்துள்ளது. மேலும், தற்போது எடுக்கப்பட்டுள்ள முடிவுகள் நீதிமன்ற இறுதித் தீர்ப்புக்கு உட்பட்டது என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இந்த அங்கீகாரத்தால் இரட்டை இலை சின்னம் எடப்பாடி பழனிசாமிக்கு கிடைத்துள்ளது.

அ. தி. மு. கவில் பன்னீர்செல்வம், பழனிசாமி தரப்பினர் பிரிந்த பிறகு, கடந்த 2022 ஜூலை 11 ஆம் திகதி நடைபெற்ற பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் செல்லாது என அறிவிக்கக் கோரி பன்னீர்செல்வம் தரப்பில் தொடரப்பட்ட வழக்கில், பொதுக்குழு தீர்மானங்கள் செல்லும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதன்படி, பொதுச் செயலாளராக பழனிசாமி தெரிவு செய்யப்பட்டதும் செல்லும் என்பதால், கட்சியின் பொதுச் செயலாளராக சமீபத்தில் அவர் பொறுப்பேற்றார்.

இதையடுத்து, பொதுச்செயலாளர் பதவி உட்பட ஜூலை 11ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அ. தி. மு. கவின் சட்ட விதிகள் திருத்தமாக அங்கீகரிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திடம் பழனிசாமி தரப்பு வலியுறுத்தியது. ஆனால், தேர்தல் ஆணையம் எந்த முடிவும் எடுக்கவில்லை.

இதனிடையே, கர்நாடக தேர்தலில் போட்டியிட, அ. தி. மு. கவில் பழனிசாமி தரப்பு முடிவெடுத்தது. பன்னீர்செல்வம் தரப்பினரும் போட்டியிடப் போகின்றனர் என்று அறிவிக்க, இரட்டை இலை சின்னம் தொடர்பான சிக்கல் உருவானது.

எனவே, தேர்தல் ஆணையம் விரைவாக முடிவெடுக்க உத்தரவிடுமாறு, டில்லி உயர் நீதிமன்றத்தில் பழனிசாமி தரப்பினர் வழக்கு தொடர்ந்தனர். பழனிசாமி தரப்பினரின் மனு தொடர்பாக தேர்தல் ஆணையம் 10 நாட்களுக்குள் முடிவெடுக்க டில்லி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. பன்னீர்செல்வம் தரப்பில் தேர்தல் ஆணையத்தில் மனு ஒன்றை அளிக்கப்பட்டது. அதில், அ. தி. மு. க. பொதுச் செயலாளராக பழனிசாமியை அங்கீகரிக்கக்கூடாது என்று தெரிவித்திருந்தார்.

இந்தச் சூழலில், பழனிசாமி தரப்பினரின் மனு தொடர்பாக, இந்திய தலைமைத் தேர்தல் ஆணையம் நேற்று வியாழக்கிழமை தனது முடிவை அறிவித்துள்ளது. அதில், அ. தி. மு. க. பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமியை தேர்தல் ஆணையம் அங்கீகரித்துள்ளது. தற்போது எடுக்கப்பட்டுள்ள முடிவுகள் நீதிமன்ற இறுதித் தீர்ப்புக்கு உட்பட்டது என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதனால், கர்நாடக தேர்தலில் இரட்டை இலை சின்னத்தில் எவ்வித சிக்கலுமின்றி அ. தி. மு. க. போட்டியிடும் சூழல் உருவாகியுள்ளது. முன்னதாக, நேற்று முன்தினம் அ. தி. மு. க. சார்பில் கர்நாடகா சட்டப்பேரவை தேர்தலில் பெங்களூரு புலிகேசி நகர் தொகுதிக்கு டி. அன்பரசன் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் ஆணைத்தின் அங்கீகாரத்தை அடுத்து அ. தி. மு. கவினர் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

(ஐ)

## அ. தி. மு. க. கட்சி மோதல்:

# இ. பி. எஸ்., ஓ. பி. எஸ்., ஸ்டாலின் பேரவையில் காரசார விவாதம்!

சென்னை, ஏப். 21

அ. தி. மு. க. அலுவலகத்தில் கடந்த ஆண்டு ஜூலையில் நடந்த மோதல் தொடர்பாக தமிழக சட்டப்பேரவையில் நேற்று வியாழக்கிழமை காரசார விவாதம் நடைபெற்றது.

தமிழக சட்டப்பேரவையில் வரவு - செலவு திட்ட கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று, சட்டப்பேரவை நிகழ்வுகள் தொடங்கின. இதனைத் தொடர்ந்து, பொலிஸ் மானியக் கோரிக்கைமீது விவாதம் நடைபெற்று வருகிறது.

அப்போது, கடந்த ஆண்டு ஜூலை 11ஆம் திகதி ராயப்பேட்டை அ. தி. மு. க. தலைமை அலுவலகம் அமைந்துள்ள பகுதியில் பன்னீர்செல்வம் (ஓ. பி. எஸ்.), பழனிசாமி (இ. பி. எஸ்) ஆதரவாளர்கள் இடையே கடும் மோதல் ஏற்பட்டது தொடர்பாக தமிழக சட்டப்பேரவையில் காரசார விவாதம் நடைபெற்றது.

இந்த விவாதத்தில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, “பிரதான எதிர்க்கட்சி அ. தி. மு. க., அதன் தலைமை அலுவலகத்தை சிலர் திட்டமிட்டு தாக்க முயற்சித்தனர். தகுந்த பாதுகாப்பு வழங்கக் கோரி பொலிஸில் முறைப்பாடு செய்தோம். ஆனால், பொலிஸ் வழங்கவில்லை” என்று தெரிவித்தார்.

முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் பேசுகையில், “யார் அத்துமீறியது என்பதை விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டியது பொலிஸார் பொறுப்பு. யார் வெறியாட்டம் நடத்தினார்கள் என்பதை தனி மேடை போட்டு கூட பேசத் தயாராக இருக்கிறேன்” என்றார்.

இதில் பதில் அளித்த முதல்வர் மு. க.ஸ்டாலின், “அ. தி. மு. க. அலுவலகத்தில் நடந்த பிரச்னை உட்கட்சி விவகாரம். வெளியே நடந்த சம்பவத்துக்கு நாங்கள் பாதுகாப்பு கொடுத்தோம். உள்ளே நடந்த சம்பவத்துக்கு நாங்கள் பொறுப்பல்ல. இவ்விவகாரத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு உரிய விசாரணை நடக்கிறது. நீதிமன்றத்திலும் வழக்கு விசாரணை நடந்து வருகிறது. இவ்வழக்கில் 16 பேர் கைது செய்யப்பட்டனர்” என்று தெரிவித்தார். (ஐ)

# நடிகர் விஜய் அரசியலுக்கு வந்தால் அவரே என்னை ஆதரிக்க வேண்டும்!

## நாம் தமிழர் சீமான்

சென்னை, ஏப். 21

நடிகர் விஜய் அரசியலுக்கு வந்தால் வலிமையாக இருக்கும். விஜயை நான் ஆதரிக்கத் தேவையில்லை. அவர்தான் என்னை ஆதரிக்க வேண்டும் என்றும் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பேசியுள்ளார்.

நடிகர் விஜயின் மக்கள் இயக்கத்தை அரசியல் கட்சியாக மாற்றும் பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. இந்நிலையில், விஜயின் இயக்கத்தின் மாநில நிர்வாகி புஸ்ஸி ஆனந்த் கூறுகையில் “விஜய் மக்கள் இயக்கம் அரசியல் கட்சியாக மாறுமா இல்லையா என்பதை விரைவில் விஜய் அறிவிப்பார்” என்று கூறியிருந்தார். .

இதனையடுத்து விஜய் விரைவில் அரசியல் களம் காண்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. இது குறித்து சென்னையில் நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் செய்தியாளர்களிடம் கூறுகையில், ‘நடிகர் விஜய் அரசியலுக்கு வருவதற்கான முயற்சியை செய்து வருகிறார். இதனை நான் வரவேற்கிறேன். விஜய் அரசியலுக்கு வந்தால் வலிமையாக இருக்கும். தற்போது நான் மட்டுமே உள்ளேன். நான் விஜயை ஆதரிக்க வேண்டியதில்லை, அவர் தான் என்னை ஆதரிக்க வேண்டும். எங்களின் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டு வருபவர்கள் எங்களுடன் இணைந்து பயணிக்கலாம்’ - என்றார்.

(ஐ)

# நாட்டை மீட்க எங்களால் முடியாவிடின் வேறு எவராலும் அதை செய்ய இயலாது

## சுட்டிக்காட்டுகிறார் சுனில் ஹந்துன்நெத்தி



**கொழும்பு, ஏப். 21**

**“இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு எங்களால் முடியாவிட்டால் வேறு எவராலும் முடியாது.”**

**இவ்வாறு கூறியுள்ளார் ஜே.வி.பியின் சிரேஷ்ட உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி.**

அவர் மேலும் கூறுகையில்,

எங்களுக்கு இன்னும் பிரச்னைகள் வரலாம். பரவாயில்லை. மக்களுக்காக - இந்த நாட்டுக்காக அனைத்தையும் தாங்கிக்கொள்வோம். நாட்டைக் கட்டியெழுப்புவோம்.

எப்படியும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் நடக்காது. அது உறுதி. இருந்தும், தேர்தலைப் பெறுவதற்காக நாம் போராடுவோம்.

இந்த அரசுக்குப் பணம் ஒரு பிரச்னை இல்லை. பணம் இல்லாமையால் தேர்தலை ஒத்திப்போடவில்லை. தோல்விப் பயத்தால்தான் தேர்தலை ஒத்திப்போடுகின்றார்கள்.

தேர்தல் மக்களின் உரிமை. அதை அவர்களுக்கு வழங்கியே ஆக வேண்டும். அதை மறுக்கும் உரிமை இந்த அரசுக்குக் கிடையாது. தேர்தல் நடக்கும் வரை போராடுவோம்.

இந்த நாட்டைக் கட்டியெழுப்ப எங்களால் மட்டுமே முடியும். எங்களால் முடியாவிட்டால் வேறு எவராலும் முடியாது. மக்கள் எங்களுக்குத் தருவது ஒரு வாய்ப்புதான். அந்த வாய்ப்பை நாம் சரியாகப் பயன்படுத்தவேண்டும். அதை நாங்கள் புரிந்துகொண்டே வேலை செய்கின்றோம்-என்றார்.

(அ)

# ஆசிரியர் இடமாற்றம் இரத்து செய்யப்படாது

கொழும்பு, ஏப். 21

முறையான ஆசிரியர் இடமாற்றச் சபைகளினால் ஆசிரியர் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், எனவே இடமாற்றங்கள் இரத்துச் செய்யப்படமாட்டாது எனவும் கல்வி அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பத்து வருடங்களுக்கு மேலாக ஒரே பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்கள் சகல விடயங்களையும் கருத்திற்கொண்டு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு கடமைகளை வழங்காமல் இருக்க அதிபர்களால் முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவிக்கையில்- நான்கு பிரபல பாடசாலைகளின் அதிபர்கள் ஒன்றிணைந்து முழு இடமாற்றத்தையும் குளறுபடியாக்கி வருகின்றனர்.

பத்து வருடங்களுக்கு மேலாக ஒரே பாடசாலையில் கடமையாற்றும் அதிபர்கள் தமக்கு நட்பாகப் பழகும் சொற்ப எண்ணிக்கையிலான ஆசிரியர்களை வியாபார நோக்கில் பாடசாலைகளில் தக்கவைத்துக் கொள்ள முயல்கின்றனர்.

மேலும் ஒரு சில தலைமையாசிரியர்கள் கையொப்பமிட்டு, ஆசிரியர் பணி மாறுதல் நடைமுறையை நிறுத்தக்கோரி மனு அளித்தும், பெரும்பான்மையான தலைமையாசிரியர்கள் கையெழுத்திடவில்லை-என்றார்.

(அ)

# 203 பள்ளிவாசல்களுக்கு கண்டியில் பாதுகாப்பு

கொழும்பு, ஏப். 21

கண்டி பிரதேசத்தில் உள்ள 203 பள்ளிவாசல்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

கண்டி, அக்குரண ஆறாம் தூண் சந்திக்கு அருகே உள்ள பிரதேசத்தில் உள்ள முஸ்லிம் பள்ளிவாசல் ஒன்றை இலக்கு வைத்து குண்டுத் தாக்குதல் நடத்தப்பட உள்ளதாக நிச்சயமற்ற தகவல் கிடைத்ததையடுத்து இந்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த பாதுகாப்புக்காக பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படை மற்றும் இராணுவத்தினரும் பயன்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், பள்ளிவாசல்கள் தொடர்பில் விசேட சோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக கண்டி பிரதேசத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# யாராவது பொறுப்பேற்க தயாரெனில் அமைச்சுப் பதவியை துறக்கத் தயார்!

## கல்வி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 21

“அழுத்தங்களுக்கு மத்தியில் கல்வி அமைச்சுப் பதவியை தொடர்வதற்கு நான் விரும்பவில்லை. எவராவது பொறுப்பேற்க தயாரெனில் பதவி விலக நான் தயார்.” - என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயர்தரப்பரீட்சை முடிவடைவதற்கு முன்னரே, விடைத்தாள் மதிப்பீடு விவகாரம் தொடர்பில் பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கம் மற்றும் ஆசிரியர் சங்கங்களுடன் நான் பேச்சு நடத்தினேன். அதற்கமைய அமைச்சரவை பத்திரத்தையும் முன்வைத்தேன். எனது தரப்பில் இருந்து செய்யக்கூடிய எல்லா விடயங்களையும் செய்தேன்.

உயர்தரப்பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு நாளொன்றுக்கு 3000 ரூபாவரை வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்தது. திறைசேரியின் கண்காணிப் பின்கீழ் இதனை வழங்குவதற்கு முடிவெடுக்கப்பட்டிருந்தது.

இது விடயத்தில் நான் தனிப்பட்ட ரீதியில் அதிக தலையீடுகளை மேற்கொண்டிருந்தேன். உயர் குருதி அழுத்தம் இருக்கும் நபரொருவராக இருந்திருந்தால் சிலவேளை உயிரிழந்திருக்கக்கூடும். கடும் அழுத்தங்களுக்கு மத்தியிலேயே பணியை செய்கின்றேன். இவ்வாறு அழுத்தங்களுக்கு மத்தியில் செயற்படவேண்டிய அவசியம் எனக்கு கிடையாது.

திறைசேரியும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். அமைச்சரவை தீர்மானம் எடுத்து இரண்டு மாதங்களுக்கு பிறகே சுற்றுநிருபம் வருகின்றது. கல்வித்துறையில் தற்போதுள்ள பிரச்னைகள் தீராவிடின் நான் விரைவில் பதவி விலகுவேன்.

க.பொ.த. சாதாரணதரப்பரீட்சை மே 29 ஆம் திகதி ஆரம்பமாகும். உயர்தரப்பரீட்சையை ஒக்ரோபர் மாதம் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது-என்றார்.

(அ)

# 1,320 புதிய மருத்துவர்களுக்கு 25ஆம் திகதி முதல் நியமனம்

கொழும்பு, ஏப். 21

1,320 புதிய மருத்துவர்களுக்கு எதிர்வரும் 25ஆம் திகதி முதல் நியமனம் வழங்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி அன்றைய தினம் முதல் நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளுக்கு புதிய மருத்துவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவர்களை மிகவும் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது இந்நாட்டில் உள்ள மொத்த மருத்துவர்களின் எண்ணிக்கை சுமார் 19 ஆயிரம் எனவும், புதிய மருத்துவர்களை நியமிக்கும்போது அது 20 ஆயிரத்தைத் தாண்டும் எனவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தற்போது மருத்துவக் கல்லூரிகளில் ஆண்டுதோறும் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 500 முதல் ஆயிரத்து 800 வரை உள்ளதால், அதை 5 ஆயிரமாக உயர்த்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(அ)

# கட்டாரில் வேலை வழங்குவதாக மோசடி; 2 பெண்களை கைது செய்ய நடவடிக்கை

கொழும்பு, ஏப். 21

கட்டாரில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி நிதி மோசடியில் ஈடுபட்ட இரு பெண்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

6 இலட்சம் ரூபா பணம் அவர்களால் மோசடி செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

31 வயதான குறித்த இரு பெண்களும் ஊர்காவற்றுறை பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

முறைப்பாட்டாளர் பல் வேறு சந்தர்ப்பங்களில் சந்கேக நபர்களின் வங்கிக் கணக்கில் பணத்தை வைப்பிலிட்டுள்ள அதேநேரம், கடவுச்சீட்டையும் சந்தேகநபர்களிடம் வழங்கியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# துறைமுக நடவடிக்கைகளுக்காக டிஜிற்றல் தொடர்பாடல் கட்டமைப்பு

கொழும்பு, ஏப். 21

துறைமுக நடவடிக்கைகளுக்கு டிஜிற்றல் தொடர்பாடல் கட்டமைப்பொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக துறைமுகங்கள், கப்பல் சேவைகள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

துறைமுகத்தில் வர்த்தகக் கப்பல் மற்றும் சரக்கு அனுமதியில் தற்போது பாரிய தாமதம் ஏற்பட்டுள்ளமை இனங்காணப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதனை தவிர்க்கும் நோக்கில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்ப டவுள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த திட்டத்திற்கு சுமார் 35 மில்லியன் டொலர் செலவாகும் எனவும் ஆசிய அபிவிருத்தி வங்கி அதனை வழங்குவதற்கு முன்வந்துள்ளதாகவும் துறைமுகங்கள், கப்பல் சேவைகள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

துறைமுக டிஜிற்றல் தொடர்பாடல் கட்டமைப்பை இவ்வருட இறுதிக்குள் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் இதன்போது கூறினார்.

(அ)

# மன்னார் காட்டு பகுதிக்குள் காணாமல்போன பொலிஸார்!

மன்னார், ஏப். 21

மன்னார் பொலிஸ் சிற்றுண்டிச்சாலைக்கு விறகு எடுப்பதற்காக நேற்று முன் தினம் மதியம் மடு காட்டுப்பகுதிக்குச் சென்ற பொலிஸ் குழுவில் இருந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த பொலிஸ் சார்ஜன்ட் மடு காட்டில் காணாமல்போயுள்ளார்.

விறகு எடுக்கச் சென்ற பொலிஸ் குழுவுக்கு பொறுப்பாக இருந்த பொலிஸ் சார்ஜன்ட் காணாமல் போனமை தொடர்பில் மடு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மடு பொலிஸ் குழுவும் மன்னார் தலைமையக பொலிஸ் குழுவும் இணைந்து காட்டில் காணாமல்போன பொலிஸ் சார்ஜன்டைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

(அ)



# மகிந்தவின் தலைமையில் இடம்பெற்ற இப்தார் நிகழ்வு

*கொழும்பு, ஏப். 21*

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கொழும்பில் உள்ள உத்தியோக பூர்வ இல்லத்தில் புனித ரமழான் நோன்பை முன்னிட்டு, இப்தார் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பல முக்கிய இஸ்லாமிய மதத் தலைவர்கள் கலந்துகொண்டு தேசிய நல்லிணக்கத்தை வலுப்படுத்த முன்னாள் ஜனாதிபதியின் முயற்சிகளை பாராட்டினர்.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான எம்.யு.எம். அலி சப்ரி, டிரான் அலஸ், விதுர விக்கிரமநாயக்க, நசீர் அஹமட், பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், ஏ.எச்.எம். பௌசி, மரிஜான் பளீல், எஸ். எம்.எம்.முஷாரப், தூதுவர்கள் மற்றும் பெருந்திரளான இஸ்லாமியர்கள் கலந்துகொண்டனர்.

நாட்டில் தேசிய நல்லிணக்கத்திற்கான பிரார்த்தனைகளுடன் இப்தார் நிகழ்வு ஆரம்பமாகியது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி, 'இந்தச் சிறப்புமிக்க நிகழ்வைக் கொண்டாடுவதற்கு நீங்கள் அனைவரும் இங்கு வந்துள்ளதையிட்டு நான் பெருமையடைகிறேன். நாம் ஒரே சமூகமாக ஒன்றிணைந்து, எமது ஆசீர்வாதங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும், சமாதானத்திற்காகப் பிரார்த்தனை செய்வதற்கும் இது ஒரு சிறந்த தருணம் எனத் தெரிவித்தார். (அ)

# விமல்-கம்மன்பிலவை மீண்டும் வளைத்துப் போட நடவடிக்கை!

## தீவிர முயற்சியில் மகிந்த தரப்பு

*கொழும்பு, ஏப். 21*

**விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோரை மீண்டும் வளைத்துப் போடுவதற்கு மகிந்த ராஜபக்ஷ தரப்பு நடவடிக்கை ஒன்றை திரைமறைவில் மேற்கொண்டிடுப்பதாக மகிந்த தரப்பு வட்டாரத்தில் இருந்து அறியமுடிகின்றது.**

எதிர்காலத்தில் எழப்போகும் அரசியல் பிரச்னைகளின் போது விமல் தரப்பு மகிந்தவுடன் இருப்பதுதான் ராஜபக்ஷ தரப்புக்கு வெற்றியைக் கொடுக்கும் என்று மகிந்தவின் சகாக்கள் பலர் கருதுவதால் அவர்களின் யோசனைக்கு அமைய மீண்டும் விமல் தரப்பை மகிந்தவுடன் இணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

13 ஆம் திருத்தச் சட்டம், அரச நிறுவனங்களைத் தனியார்மயப்படுத்துதல் போன்ற பிரச்னைகள் எதிர்காலத்தில் எழவுள்ளன. அப்போது விமலின் குரல் மகிந்தவின் பக்கம் இருந்து ஒலிக்கவேண்டும் என்று அவர்கள் மகிந்தவுக்கு எடுத்துக் கூறியுள்ளனர்.

கடந்த வருடம் பிரதமர் பதவியில் இருந்து விலகிய மகிந்த அரசியல் செயற்பாடுகள் எவற்றிலும் ஈடுபடவில்லை. இப்போது அவர் மும்முரமாக அரசியல் களத்தில் குதித்துள்ளார்.

விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள மகிந்தவின் உத்தியோகபூர்வ இல்லம் இப்போது களைகட்டியுள்ளது. தினமும் கூட்டங்கள் இடம்பெறுகின்றன.

மொட்டுக் கட்சியின் தலைமையகம் பத்திரமுல்லையில் அமைந்துள்ளபோதிலும், இப்போது மகிந்தவின் இந்த வீடே தலைமையகம் போல் காட்சி கொடுக்கின்றது.

மொட்டு உறுப்பினர்கள் பலர் பத்திரமுல்லையில் இடம்பெறும் கூட்டங்களைத் தவிர்த்து வருகின்றனர். அந்தக் கூட்டங்களை பஸில் ராஜபக்ஷ நடத்தி வருவதால் அவர்களுக்கு அதில் உடன்பாடில்லை. இதனால் இப்போது அவர்கள் மகிந்தவின் வீட்டில் இடம்பெறும் வரும் கூட்டங்களிலேயே கலந்துகொள்கின்றனர். அவர்கள்தான் விமல் தரப்பை இணைக்கும் யோசனையை முன்வைத்துள்ளனர்.

பஸிலுக்கும் விமலுக்கும் ஆகாது. அதனால் பஸிலுடன் சேர்ந்து இந்த நடவடிக்கையை முன்னெடுக்க முடியாது என்பதாலும் விமலும் மகிந்தவும் நீண்ட நெருக்கம் கொண்டவர்கள் என்பதாலும் மகிந்தவை இணங்க வைத்தே விமலை வளைக்கும் நடவடிக்கையை அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# உரத்தின் விலையை குறைக்க நடவடிக்கை

*கொழும்பு, ஏப். 21*

இந்த வருடம் நெற்செய்கைக்கான எம்.ஓ.பி. உரத்தின் விலையை 4500 ரூபாவினால் குறைக்க அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதாகவும், தற்போது சந்தையில் எம்.ஓ.பி. உரத்தின் 50 கிலோகிராம் மூடை 18,500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதால் அந்தத் தொகையை விவசாயிகளுக்கு ஏற்க சிரமமாக இருப்பதால் விலையைக் குறைக்கத் தீர்மானித்ததாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்படி அடுத்த வாரம் கூடவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அவர் கூறினார்.

குறைந்த விலையில் உரங்களை வழங்குவதற்கு அரசாங்கத்திற்கு சொந்தமான இரண்டு உர நிறுவனங்களும் செயற்பட்டு வருவதால், இரசாயன உர விற்பனை தொடர்பில் சந்தையில் போட்டி உருவாகியுள்ளதோடு, இதன் மூலம் விவசாயிகள் பயனடைவதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# தேசிய கண் வைத்தியசாலையில் அறுவைச் சிகிச்சைகள் நிறுத்தம்!

*கொழும்பு, ஏப். 21*

தேசிய கண் வைத்தியசாலையின் சகல அறுவைச் சிகிச்சைகளும் நேற்றுமுன்தினம் முதல் காலவரையறையின்றி இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அறுவைச் சிகிச்சை அறையில் கிருமிகள் பரவியதன் காரணமாக இவ்வாறு சிகிச்சைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் ஏ.ஆர். எம். தௌபிக் குறிப்பிட்டார்.

அறுவைச் சிகிச்சை அறையில் கிருமிகள் பரவுவதை துரிதமாக அகற்றி வழமை நிலைக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், எனினும் மீளத் திறப்பது தொடர்பில குறிப்பிட்ட திகதியை அறிவிக்க முடியாது எனவும் பணிப்பாளர் கூறினார்.

அறுவைச் சிகிச்சை அறைக்குள் கிருமிகள் எவ்வாறு பரவியது என்பது தொடர்பில் சுகாதார அமைச்சினால் முறையான விசாரணை நடத்தப்படவேண்டுமென சுகாதார நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# திருவையாறு சரவணாஸ் பாலத்தை முழுமையாக அகற்றுவதற்கு முடிவு!

*கிளிநொச்சி, ஏப். 21*

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட திருவையாறு பகுதியில் ஆபத்தான நிலையில் காணப்படும் சரவணாஸ் பாலத்தை முழுமையாக அகற்றுவதற்கு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என மாவட்டச் செயலக ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இப்பாலத்தின் ஆபத்தான நிலைமை கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் ஊடகங்களில் வெளிக்கொண்டு வரப்பட்டிருந்தன. இந்த நிலையில் குறித்த விடயம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன் தினம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் துறைசார் அதிகாரிகளுடன் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் சரவணாஸ் பாலத்தின் அனர்த்த நிலைமை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இரணைமடு நீர்ப்பாசன பிரதான கால்வாயின் மேலாக கட்டப்பட்டிருக்கும் சுமார் 40 வருட பழமையான சரவணாஸ் பாலம் தற்போது சேதமடைந்து இடிந்து விழும் தறுவாயில் காணப்படுவதால், குறித்த பாலத்தின் ஊடாக பொதுமக்கள் பயணம் செய்ய முடியாத ஆபத்தான நிலை காணப்படுவதுடன், சீரான நீர்ப்பாசன வழங்கலையும் மேற்கொள்ள முடியாத சூழல் உருவாகியுள்ளது.

இவ்வாறான இடிபாடுகளுடன் காணப்படும் பாலத்தினால் ஏற்படப்போகும் பாரிய ஆபத்துக்களை தவிர்ப்பதற்காக கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளின் கோரிக்கைக்கு அமைவாக பாலத்தை முழுமையாக அகற்றுவதாக முடிவு எட்டப்பட்டுள்ளது. பாலத்தை அகற்றுவதற்கான முழு பொறுப்பை நீர்ப்பாசன திணைக்களம் ஏற்றுக்கொண்டது.

மேலும் புதிய பாலத்தை விரைவாக அமைப்பதற்கான



திட்டமொன்றை விரைவாக தயாரித்து, அதனை நடைமுறைப் படுத்தி விரைவில் புதிய பாலத்தை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், திட்டமிடல் பணிப்பாளர், கரைச்சி பிரதேச செயலாளர், உதவித்திட்டமிடல் பணிப்பாளர், உதவிப்பணிப்பாளர், அனர்த்த முகாமைத்துவ பிரிவு, பொலிஸ் அதிகாரி, கரைச்சி பிரதேச சபை செயலாளர், நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர், நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், கமநலச் சேவை அதிகாரிகள், கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்துகொண்டனர். (அ)

# பஸ் விபத்தில் 10 பேர் காயம்

*கொழும்பு, ஏப். 21*

கொழும்பு - சிலாபம் வீதியில் வென்னப்புவ நைனாமடம் கிங்கோயா பாலத்துக்கு அருகில் நேற்று அதிகாலை 3.45 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று புல்மோட்டையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்தபோதே விபத்துக்குள்ளானது.

குறித்த பஸ் பாலத்தின் பக்கவாட்டு வேலியில் மோதியதில் விபத்து ஏற்பட்டது. இதனையடுத்து சிமெந்து கலவை ஏற்றிச் சென்ற லொறியும் குறித்த பஸ் மீது பின்புறத்தில் மோதியுள்ளது.

சம்பவம் தொடர்பில் வென்னப்புவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# “வாகனங்கள் பழுது பார்ப்பதை பெண்களும் மேற்கொள்ளமுடியும்”

## டேவிட் பீரிஸ் கூட்டு நிறுவனத்தின் பயிற்சிநெறியை பூர்த்தி செய்த பெண்கள் தெரிவிப்பு

“வாகனங்கள் பழுதுபார்ப்பதை பெண்களாலும் மேற்கொள்ள முடியும் என்பதை இந்த உலகுக்கு பெண்களாகிய நாங்கள் நிரூபித்துக் காட்டியுள்ளோம்’ என்று டேவிட் பீரிஸ் குழுமம் வழங்கிய இயந்திரவியில் பயற்சிநெறியில் பங்குபற்றி சான்றிதழை பெற்றுக் கொண்ட பெண்கள் கூட்டாக தெரிவித்துள்ளனர்.

திறமை மிக்க பெண் தொழிலாளர்களை உருவாக்குவது மற்றும் நாட்டின் பொருளாதாரத்தில் பெண்களின் சுறுசுறுப்பான பங்கேற்பை ஊக்குவிக்கும் நோக்கில் டேவிட் பீரிஸ் குழுமமானது இயந்திரவியல் பயிற்சித் திட்டத்தை அண்மையில் யாழ்ப்பாணத்தில் முன்னெடுத்தது.

இந்த பயிற்சித் திட்டத்தில் சுமார் 20 பெண்கள் பங்குபற்றியிருந்தனர். இந்தப் பயிற்சிநெறி குறித்து ‘ஈழநாடு’ பத்திரிகைக்கு அளித்த விசேட செவ்வியிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அந்த செவ்வியின் முழுவடிவத்தை இங்குக் காணலாம்.



**ராஜ்குமார் தர்ஷினி**
**பருத்தித்துறை**

நான் சுயத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றேன். ஓட்டோவில் பொருட்களை ஏற்றிச் சென்று விற்பனை செய்து வருகின்றேன்.

சில வேளைகளில் வாகனமானது பழுதடைந்து இடையில் நின்றுவிடும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் வாகனத்தைத் திருத்திற் கொள்வதற்கு பாரிய சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

வாகனங்களை பழுதுப்பார்க்கும் நிலையத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி அங்கிருந்து வாகன திருத்துநர்கள் வரும்வரை வீதியில் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதனால் நான் பல அசௌகரியங்களை எதிர்கொண்டேன்.

இந்த அசௌகரியங்களை தவிர்த்துக்கொள்ளவேண்டும், இவ்வாறான சந்தர்ப்பங்கள் வரும்போது அதனை துணிவுடன் எதிர்கொள்ள வேண்டும் என்பதற்காகவே நான் இயந்திரவியல் பயிற்சியை தொடர வேண்டும் என்று நினைத்தேன்.

வாகனங்களை பழுது பார்ப்பது எவ்வாறு என்பதை நான் அறிந்துகொள்ளவேண்டும் என்று நினைத்தேன்.

டேவிட் பீரிஸ் குழுமம் அதற்கான ஒரு வாய்ப்பை எனக்கு ஏற்படுத்தி தந்தது. யாழ்ப்பாணம், பருத்தித்துறை பிரதேச செயலகத்தினால் எனக்கு அழைப்பு ஒன்று வந்தது. எனவே, அந்த வாய்ப்பை நான் நன்கு பயன்படுத்திக்கொண்டு இயந்திரவியல் துறைக்குள் நான் என்னை உள்வாங்கிக்கொண்டேன்.

இந்தத் துறைக்குள் நான் உள்வாங்கப்பட்டதால் பெரும் உதவியும் பலமும் கிடைத்ததாக நான் உணர்கின்றேன்.

**சிரேஷ்கரன் தவமலர்**
**திடீர் மரண விசாரணை அதிகாரி**

இயந்திரவியல் துறைக்குள் சகல பெண்களாலும் உள்வர முடியும். கொரோனா பெருந்தொற்று காலத்தில் எனது சைக்கிளை பழுதுபார்ப்பதற்காக பழுதுபார்க்கும் நிறுவனத்துக்கு கொண்டு சென்றபோது பழுதுபார்க்கும் நிறுவனத்தில் இருந்த அதிகாரிகள் எமது நிலைமையை உணர்ந்துகொள்ளாமல் கதைத்தனர். கொரோனா காலத்தில் பொருட்களை வாங்குவதற் கான சூழல் இல்லை என்று தெரிந்துகொண்டும் குறித்த நிறுவ னத்தின் ஊழியர்கள் ‘ரயர் ரயூபை உடனடியாக மாற்றுங்கள் இல்லையென்றால் அதனை ஒட்டமுடியாது’ என்று கூறி என்னை திருப்பி அனுப்பினர்.

அந்த சைக்கிளை நானே ஒட்டி, ஓடிக்கொண்டு இருக்கின்றேன். அந்த தருணத்தில்தான் எனக்கு இயந்திரவியல் குறித்து போதிய அறிவை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது.

அப்போது டேவிட் பீரிஸ் குழுமத்தின் வேலைத்தளம், யாழ்ப்பாணம் புரொன்ட் வீதியிலுள்ள கொக்குவில் பகுதியில் ஆரம்பிக்கப்படுகின்றது என்று கூறி விழுதுகள் நிறுவனத்தினூடாக எனக்கு தகவல் கிடைத்தது.

அந்த நிலையத்தின் திறப்பு விழாவில் கலந்துகொண்டேன். அதன் பின்பு 18.03.2022 அன்று ஆரம்பிக்கப்பட்ட பயிற்சிநெறியில் கலந்துகொண்டு பயன்பெற்றேன்.

அநேகமான பெண்கள், அரசாங்க வேலைதான் தேவை என்று இருக்கின்றார்கள். அவ்வாறான ஒரு எண்ணம் இல்லாது தனது வருமானத்தைப் பெருகிக்கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும்.

தற்போது மோட்டார் சைக்கிளைத்தான் அதிகமாக பயன்படுத்தப்படுகின்றனர். பெண்களும் ஆண்களும் அதிகமாக மோட்டார் சைக்கிளையே பயன்படுத்துகின்றனர். தங்களது வாகனங்களை தாங்களே திருத்திக்கொள்ளும் வகையிலான அனுபவம் எமக்கு தேவை.

வாகனங்களை பழுதுபார்ப்பாதற்காக, பழுதுபார்க்கும் நிலையங்களுக்கு சென்று அங்குள்ள ஊழியர்களின் சினத்துக்கு உள்ளாகாமல் எமது நேரத்தை வீணடிக்காமல் நாமே எமது வாகனங்களை பழுதுபார்த்துக்கொள்ளும் வகையில் எம்மை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

இதனூடாக எமது நேரமும் மீதமாகின்றது. அதேபோன்று பணத்தையும் மீதமாக்கிக்கொள்ளலாம். இது எமது வருமானத்துக்கு ஒரு வழியாக இருக்கும்.

எனவே பெண்கள் இயந்திரயவியல் துறைக்குள் துணிந்து ஆர்வத்துடன் வரவேண்டும்.

உண்மையில் முச்சக்கரவண்டியை பழுதுபார்த்து திருத்தும் போது எமக்குள் ஓர் ஆர்வம் ஏற்படுகின்றது. அதேநேரம் இந்தத் துறையில் இன்னும் அதிகமான விடயங்களை கற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணமும் ஏற்படுகின்றது.

ஆரம்பத்தில் ஒரு வாகனத்தில் என்ன குறை இருக்கின்றது, அதனை எவ்வாறு திருத்துவது, குறை என்ன என்பதை எவ்வாறு கண்டுபிடிப்பது, வாகன உதிரிப்பாகங்களின் வகை என்ன, உதிரிப்பாகங்களை கழற்றுவதற்கு எந்தக் கருவியை பயன்படுத்த வேண்டும் போன்ற விடயங்கள் எமக்கு தெரியாமலேயே இருந்தன.

ஆனால் தற்போது நாம் அந்த கருவிகள் என்னவென்பதை இனங்காணுகின்றோம். எந்த சாவியால் வாகன உதிரிப்பகங்களை கழற்றவேண்டும். எத்தனையாம் இலகத்தில் கழற்ற வேண்டும் போன்ற விடயங்களை நாங்கள் நன்கு அறிந்து வைத்துள்ளோம்.

உண்மையில் டேவிட் பீரிஸ் குழுமத்தினால் யாழ். மாவட்டத்தில் 8ஆவது தொழிற்பயிற்சி நெறியாக ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பயிற்சிநெறியானது பெண்களுக்கு வரப்பிரசாதமாகும்.

அதேபோன்று பெண்கள் இயந்திரவியலை மேற்கொள்ள முடியாது என்று ஒதுங்கி இருக்காது எங்களாலும் முடியும் என்று முன்வந்து கற்றுக்கொள்ள வேண்டும். இதனை நான் எனது அனுபவத்தின் வாயிலாகக் கூறுகின்றேன்.

இந்தப்பயிற்சிநெறியில்வயது, வித்தியாசமின்றிகலந்துகொண்டு பயன்பெற முடியும் என்பதை கூறிக்கொள்கின்றோம்.

> “வாகனங்களை பழுதுபார்ப்பாதற்காக,பழுதுபார்க்கும் நிலையங்களுக்கு சென்று அங்குள்ள ஊழியர்களின் சினத்துக்கு உள்ளாகாமல் எமது நேரத்தை வீணடிக்காமல் நாமே எமது வாகனங்களை பழுதுபார்த்துக்கொள்ளும் வகையில் எம்மை நாம் வளர்த் துக்கொள்ள வேண்டும். இதனூடாக எமது நேரமும் மீதமாகின்றது. அதேபோன்று பணத் தையும் மீதம்பிடித்துக்கொள்ளலாம். இது எமது வருமா னத்துக்கு ஒரு வழியாக இருக்கும்”
>
> **- சிரேஷ்கரன் தவமலர்**
> *திடீர் மரண விசாரணை அதிகாரி*

> “வாகனங்களை பழுதுபார்க்கும் நிலையத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி அங்கிருந்து வாகன திருத்துனர் கள் வரும்வரை வீதியில் காத்திருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதனால் நான் பாரிய அளெகரி யங்களை எதிர்கொண்டேன்.
>
> இந்த அசௌகரியங்களை தவிர்த்துக்கொள்ளவேண் டும், இவ்வாறான சந்தர்ப்பங்கள் வரும் போது அதனை துணிவுடன் எதிர்கொள்ள வேண்டும் என்பதற்காகவே நான் இயந்திரவியல் பயிற்சிநெறியை தொடரவேண் டும் என்று நினைத்தேன்”
>
> **-ராஜ்குமார் தர்ஷினி**

**செல்வகுமார் கோமலேஸ்வரி**
**யாழ். மாவட்டத்தில் ஓட்டோ செலுத்தும் முதல் பெண்**

யாழ்.மாவட்டத்தில் முச்சக்கர வண்டி செலுத்தும் முதல் பெண்மணி என்பதில் பெருமைக்கொள்கின்றேன். முச்சக்கர வண்டி பழுதாகினால் அதனை பழுதுபார்க்க முடியாது ஆரம்பத்தில் சிரமங்களை எதிர்கொண்டேன்.

எனினும் டேவிட் பீரிஸ் குழுமம் வழங்கிய தொழில்நுட்ப பயிற்சியினூடாக எனது வாகனத்தை நானே பழுதுபார்க்கும் அளவுக்கு என்னை நான் வளர்த்துக்கொண்டுள்ளேன்.

பெண்கள் எந்தத் துறைக்குள் உள்வாங்கப்பட்டாலும் அந்தத் துறைகளில் சால்களை எதிர்கொள்ள நேரிடும்.

‘இவள் ஒரு பெண், இவள் இதனை செய்து முடித்துவிடுவாளா’ என்ற கேள்விகளானது பொதுவெளியில் எழுப்பப்படுகின்றன. ஆனால், பெண்களால் சாதிக்க முடியாதது என ஒன்றும் இல்லை.

பெண்கள் திறமைசாலிகள். அதற்கான வாய்ப்புகள் அமைந்தால் அந்த வாய்ப்புகளை பயன்படுத்தி எமது திறமைகளை வெளிக்கொணர முடியும்.

பெண்களுக்கென பல தடைகள் காணப்படுகின்றன.

பெண்களாக இருக்கின்றபடியால் வீட்டுச்சுமைகளை சுமக்க வேண்டியுள்ளது.

வீட்டுச் சுமைகளுக்கு மத்தியிலேயே நான் இந்தப் பயிற்சியில் பங்குபற்றினேன்.

வீட்டில் பிள்ளைகளுக்கான வேலைகள், கணவருக்குரிய வேலைகள் என சகலவற்றையும் முடித்து இந்த பயிற்சி நெறிக்கான நேரத்தை ஒதுக்கி பயிற்சிநெறியில் பங்குபற்றுகின்றோம்.

ஓட்டோவை செலுத்தும்போதும்கூட நான் பல சவால்களை சந்தித்திருக்கின்றேன்.

ஓட்டோவை செலுத்துவதற்கான பயிற்சியின்போது கூட ‘இவள் பெண், இவள் ஓட்டோவில் நன்றாகதான் பயணிப்பாள்’ என்று கூறிய தரப்பினருக்கும் இருக்கவே செய்தனர்.

எனினும் நான் அந்த சவால்களை தாண்டி பயிற்சி நெறியில் ஈடுபட்டு தொழிலுக்குள் உள்வாங்கப்பட்டபோது பாராட்டுக்கள் வந்து குவிந்தன.

என்னை ஏளனம் செய்தவர்கள்கூட என்னை வந்து பாராட்டிச் சென்றனர்.

டேவிட் பீரிஸ் குழுமம் வழங்கிய மூன்று மாத கால பயிற்சியின் நிறைவின் பின்னரும்கூட பலர் எமக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

பெண்களை இந்த சமூகம் குறைவாகவே பார்க்கின்றது.

எமது திறன்களை வளர்த்துக்கொண்டு நாம் வெளியில் வரும்போது எம்மைவிட மகிழ்ச்சியடைவது இந்த சமூகமாவே உள்ளது.

பெண்கள் திறமைசாலிகள். திறமைகளை வளர்த்துக்கொண்டு முன்னோக்கிப் பயணிக்கவேண்டும்.

**பத்மசிறி கலைச்செல்வி**
**யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்**

எனது கணவர் முச்சக்கரவண்டியை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்டார். அதன் மூலமாகவே எனக்கு இந்தப் பயிற்சி நெறியில் பங்குபெறுவதற்கான வாய்ப்பு கிடைத்தது.

இந்தப் பயிற்சிநெறியில் பங்குபற்றுவதற்கு ஆரம்பத்தில் தயங்கினேன். நம்பிக்கையற்ற நிலைமையிலேயே இந்தப் பயிற்சி நெறியில் பங்குபற்றினேன்.

குழப்பமான மனநிலையிலேயே பயிற்சிகளிலும் பங்குபற்றினேன். எனினும் இந்தப் பயிற்சிநெறியில் பங்குபற்றிய சக தோழிகள் என்னை ஊக்குவித்தனர். அது மட்டுமன்றி எனது ஆசிரியரும் என்னை ஊக்குவித்தார். முதற்கண் நான் அவருக்கு இந்த இடத்தில் நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.



எனது தோழிகள், ஆசிரியரது ஒத்துழைப்புகள் இல்லாமல் நான் இந்தப் பயிற்சிநெறியை தொடர்ந்து இருக்க முடியாது.

ஆரம்பத்தில் வாகனத்தின் உதிரிப்பாகங்கள்கூட எனக்கு தெரியாது. தற்போது அந்த வாகனங்களின் உதிரிப்பாகங்கள் என்ன என்று எனக்கு தெரியும்.

எனது கணவரது ஓட்டோவை நான் இங்கு கொண்டுவந்து பழுதுபார்த்துக் கொடுத்தேன்.

இயந்திரங்களை பழுதுபார்க்கும் கற்கைநெறியை பெண்கள் தொடர்ந்தால் அது அவர்களது எதிர்கால நலனுக்கு சிறந்ததாக அமையும்.

# கெட்ட போரிடும் உலகம்!

பதினான்கு மாதங்களாக தொடரும் ரஷ்ய - உக்ரைன் போர் எப்போது முடிவுக்கு வரும் என்று இப்போது வரை யாருக்கும் தெரியாது. 2022-இல் மட்டும் இந்தப் போரால் உலகப் பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட இழப்பு 1.3 டிரில்லியன் டாலர் என்று ஒரு ஜெர்மானிய பொருளாதார நிறுவனம் அனுமானித்திருக்கிறது.

உக்ரைன் போர் தொடர்ந்து கொண்டிருக்கும் வேளையில், கிழக்கு ஆசியாவில் தாய்வான் தீவைச் சுற்றிய கடல் பகுதியில் போர்ச்சூழலை உருவாக்க முற்பட்டிருக்கிறது சீனா. தாய்வான் அதிபர் சாய் இங் பென்னின் அமெரிக்க விஜயத்தால் ஆத்திரமடைந்த சீனா, தாய்வானைச் சுற்றி போர்ப் பயிற்சியை நடத்தியது. மூன்று நாள் நடத்திய அந்த போர்ப் பயிற்சியில் 70-க்கும் அதிகமான போர்க் கப்பல்களும், 13 விமான தாங்கி கப்பல்களும் களமிறக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து, தென் சீனக் கடலில் தங்களது ஏவுகணை தாங்கிய நீர்மூழ்கி கப்பல்களை நிறுத்தி, சீனாவின் செயலுக்கு எதிர்வினையாற்றியது



அனைத்து நாடுகளும் ஒன்றை மற்றொன்று சார்ந்திருக்கும் உலகமயச் சூழலில், உலகின் எந்தப் பகுதியில், எந்த நாட்டில் என்ன பாதிப்பு நடந்தாலும் அது, திருவிளையாடல் புராணத்தில் பிட்டுக்கு மண் சுமந்த சிவபெருமான் மீது விழுந்த பிரம்படி போல, அனைத்து நாடுகளையும் பாதிக்கும்.



அமெரிக்கா.

சுதந்திர ஜனநாயக நாடாக, கம்யூனிஸ் சீனாவுக்குக் கடிவாளம் போடும் விதத்தில் தாய்வான் தனித்து இயங்குவதை அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் மறைமுகமாக ஆதரிக்கின்றன. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தாய்வானுடன் உறவு ஏற்படுத்திக்கொள்வதை, தாய்வானை சொந்தம் கொண்டாடும் சீனா விரும்பவில்லை. இதுதான் அடிப்படை பிரச்னை.

2050-இல் சீன மக்கள் குடியரசு தனது நூற்றாண்டைக் கொண்டாடும்போது, தாய்வான் உள்ளிட்ட எல்லா பகுதிகளையும் தன்னுடன் இணைத்து 'அகண்ட சீனா' உருவாக்கப்பட வேண்டும் என்பது சீன அதிபார் ஷி ஜின்பிங்கின் கனவு. அந்த குறிக்கோளுடன்தான் ஹொங்கொங்கை இணைத்துக் கொண்டது சீனா. இப்போது தாய்வானையும் தன்வசப்படுத்தும் முயற்சியில் இறங்கியிருக்கிறது. தாய்வானை மட்டுமல்ல, இந்தியாவின் அருணாசல பிரதேசம் உள்ளிட்ட, தான் சொந்தம் கொண்டாடும் எல்லா பகுதிகளையும் இணைப்பது என்பதுதான் சீனாவின் இலக்கு. இதற்கு எதிராக அமெரிக்காவோ, வேறு மேலை நாட்டு சக்திகளோ தலையிட்டால் போருக்கும் தாங்கள் தயார் என்பதை மறைமுகமாக உணர்த்துவதுதான் தாய்வானைச் சுற்றி நடத்தப்பட்ட மூன்று நாள் போர்ப் பயிற்சி.

கிழக்கு ஆசியாவில் இப்படியென்றால், மேற்கு ஆசியாவிலும் போர் முழக்கத்துக்கான அறிகுறிகள் தென்படுகின்றன. சிரியாவின் எல்லையைக் கடந்து இஸ்ரேல் கடந்த திங்கள்கிழமை தாக்குதல் நடத்தியிருக்கிறது. அதனால் இஸ்ரேலுக்கும் ஏனைய அரபு நாடுகளுக்கும் இடையில் மீண்டும் ஒரு போர்ச்சூழல் ஏற்பட்டிருக்கிறது.

1967-இல் சிரியாவிலிருந்த சோலான்





குன்றுகளை இஸ்ரேல் ஆக்கிரமித்தது. சோலான் குன்றுகளை குறிவைத்து சிரியாவிலிருந்து ராக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், அதற்கு எதிரான பதிலடிதான் தனது தாக்குதல் என்றும் இஸ்ரேல் கூறுகிறது. பிரச்னையின் தொடக்கம் இதுதான்.

கிறிஸ்தவர்கள், யூதர்கள், முஸ்லிம்கள் மூன்று பேருக்குமே புனித தலமான ஜெருசலேமில் உள்ள அல் அக்ஸா மசூதி வளாகம் தீர்க்க முடியாத பிரச்னையாகத் தொடர்கிறது. இஸ்ரேல் காவல்துறையினர் அல் அக்ஸாவில் நடத்திய சோதனையைத் தொடர்ந்து, மேற்கு ஆசியாவைப் போர் மேகங்கள் சூழத் தொடங்கியிருக்கின்றன.

2006-இல் லெபனான் போருக்குப் பிறகு இஸ்ரேல் தனது எல்லையைக் கடந்து இப்போது முதன்முறையாக தாக்குதல் நடத்தியிருக்கிறது. பாலஸ்தீனம், லெபனான், சிரியா, ஈரான் நாடுகளை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால், இந்த முறை தக்க பதிலடி கொடுக்க வேண்டும் என்று அந்த நாடுகள் தீர்மானித்திருக்கின்றன. அதற்கான முன்னெடுப்பு ஆலோசனைக் கூட்டத்தை நடத்த இருக்கின்றன. காஸாவின் ஹமாஸூம், ஈரானின் ஆதரவுள்ள ஷியா அமைப்பான ஹிஸ்புல்லாவும் அதற்கான முனைப்பில் இறங்கியிருக்கின்றன.

மேற்கு ஆசியாவிலும், தாய்வானிலும் போர்ச் சூழல் ஏற்படுவது இந்தியாவுக்கு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். இந்தோ - பசிபிக் பகுதியின் தெற்கு சீன கடல் வழியாகத்தான் இந்தியாவிலிருந்து செல்லும் 55 வீத சரக்குக் கப்பல்களும் பயணிக்கின்றன. 1992-இல் இஸ்ரேலுடனான ராஜாங்க உறவுக்குப் பிறகும், அடுத்து அரபு நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் இடையே சுமுக உறவு நிலவுகிறது. இஸ்ரேலுடன் அரபு நாடுகள் மோதினால் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை தர்மசங்கடத்தில் ஆழ்த்தப்படும்.

ரஷ்ய - உக்ரைன் போரால் ஏற்பட்டிருக்கின்ற பாதிப்புகளில் இருந்து மீள முடியாமல் உலகம் தவித்துக் கொண்டிருக்கும் வேளையில், வேறு பகுதிகளிலும் போர்ச் சூழல் ஏற்படுவது, ஒட்டுமொத்த உலகத்தையும் அச்சத்தில் ஆழ்த்துகிறது. கோவிட் 19 கொள்ளை நோய்த்தொற்றிலிருந்து மீண்டுவிட்டோம் என்று நினைக்கும்போது உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு பெருத்த இடியாக அமைந்தது. வெற்றி தோல்வி இல்லாமல் ரஷ்யாவும் உக்ரைனும் கடந்த 14 மாதங்களாக நடத்தும் போரால் ஏற்பட்டிருக்கும் எரிபொருள் தட்டுப்பாடும், உணவு தட்டுப்பாடும் அனைத்து நாடுகளின் பொருளாதாரங்களையும் நிலைகுலைய வைத்திருக்கிறது.

போரில் பாதிக்கப்பட்ட உக்ரைன் பொருளாதாரத்தை மீட்டெடுக்க குறைந்தது 336 லட்சம் கோடி தேவைப்படும் என்பது உலக வங்கியின் கணக்கு. பாதிப்பு உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் மட்டுமல்ல, உலகிலுள்ள எல்லா நாடுகளும் அந்த போரின் பாதிப்பை எதிர்கொள்கின்றன.

அனைத்து நாடுகளும் ஒன்றை மற்றொன்று சார்ந்திருக்கும் உலகமயச் சூழலில், உலகின் எந்தப் பகுதியில், எந்த நாட்டில் என்ன பாதிப்பு நடந்தாலும் அது, திருவிளையாடல் புராணத்தில் பிட்டுக்கு மண் சுமந்த சிவபெருமான் மீது விழுந்த பிரம்படி போல, அனைத்து நாடுகளையும் பாதிக்கும். (தினமணி)

ஈழநாடு



# இலங்கையில் 200 வருடங்களாக வசிப்பிட முகவரி இல்லாமல் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்கள்!

ரஞ்சன் அருண் பிரசாத்



இலங்கையின் பொருளாதாரத்திற்கு 200 வருட காலமாக பாரிய பங்களிப்பை வழங்கும் சமூகமாக இந்திய வம்சாவளி தமிழர்கள் விளங்குகிறார்கள்.

இலங்கையின் மத்திய மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளில் இந்திய வம்சாவளி தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

கோப்பி செய்கையை முன்னெடுக்கும் நோக்கில் 1823ம் ஆண்டு காலப் பகுதியில் இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட மக்கள், இலங்கையின் மத்திய மலைநாட்டு பகுதியில் தங்க வைக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து, கண்டி மற்றும் நுவரெலிய மாவட்டங்களின் எல்லையில் காணப்படும் லூல்கந்துர தோட்டத்தில் 1867ம் ஆண்டு முதல் முதலாக தேயிலை செய்கை ஆரம்பிக்கப்பட்டது.

அதன்பின்னரான காலத்தில் தேயிலை, ரப்பர் போன்ற செய்கைகளை செய்யும் வகையில், இந்தியாவிலிருந்து தமிழர்கள் அழைத்து வரப்பட்டு, மலையக பகுதிகளில் அமைக்கப்பட்ட 'லயன்" அறைகளில் அவர்கள் தங்க வைக்கப்பட்டனர்.

நாடு கடந்து சுமார் 200 வருடத்திற்கு முன்னர், இலங்கைக்கு வருகை தந்த மலையக தமிழர்கள், இன்றும் அதே லயன் அறைகளில் தமது வாழ்க்கையை கொண்டு நடத்தி வருகின்றனர்.

தேயிலை, ரப்பர் போன்ற செய்கைகளை முன்னெடுக்கும் பெருந்தோட்ட நிறுவனங்களின் காணிகளில் அமைக்கப்பட்டுள்ள லயன் அறைகளிலேயே இந்த மக்கள் இன்றும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பெரும்பாலும் உடைந்த சுவர்கள், துவாரங்களுடனான கூரைகள், உடைந்த மற்றும் சுகாதார தரமற்ற கழிப்பறைகள், குளியலறைகள் என சுகாதாரமற்ற வாழ்க்கையை பெரும்பாலான இந்திய வம்சாவளி மலையக தமிழர்கள் வாழ்ந்து வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது.

நாளாந்த சம்பளத்திற்கு வேலை செய்யும் இவர்களுக்கு இன்று வரை போதியளவான சம்பளம் வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டும் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வருகின்றது.

ஆயிரம் ரூபா நாளாந்த அடிப்படை சம்பளத்தை கோரி பல வருடங்களாக போராட்டங்களை நடத்திய மக்களுக்கு, இன்று வரை அந்த சம்பளம் உரியவாறு கிடைப்பதில்லை என்பதே கசப்பான உண்மையாகும்.

தமது வாழ்விடங்களுக்கு செல்வதற்கு உரிய போக்குவரத்து வசதிகள் இல்லை. மருத்துவ வசதிகள் இன்றும் இல்லாத பெரும்பாலான பெருந்தோட்டங்கள் இலங்கையில் இருக்கின்றன. பாடசாலை வசதிகள் இல்லாத பெருந் தோட்ட பகுதிகளும் நாட்டில் இன்று காணப்படுகின்றன.

மலையக பகுதிகளுக்கு சென்ற எமக்கு, மலையக மக்கள் எதிர்நோக்கும் இவ்வாறான பிரச்னைகளை நேரடியாகவே காணக்கூடியதாக இருந்தது.

பொருளாதார நெருக்கடி, சுகாதார பிரச்னைகள், போதியளவு கல்வி கற்கும் வசதிகள் இல்லாமை, போக்குவரத்து பிரச்னைகள் என பல்வேறு சிரமங்களை கடந்த 200 வருடங்களாக அனுபவித்து வரும் மலையக தமிழர்கள், இன்றும் தமக்கென்று ஒரு முகவரி இன்றி வாழ்கின்றனர்.

தமது அயராத உழைப்பின் மூலம் தேயிலை செய்கையை உலகறிய செய்து, இலங்கைக்கே உரித்தான சிலோன் டீ என்ற நாமத்துடனான முகவரியை பெற்றுக்கொடுத்த மலையக மக்கள், இன்றும் முகவரி இன்றி வாழ்ந்து வருகின்றமை வருத்தமளிக்கும் விடயமாகும்.

மலையகத்தில் பிறக்கும் ஒவ்வொருவரும் பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு சவால்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

முகவரி இல்லாமையினால், பிறப்பு சான்றிதழை பெற்றுக்கொள்வதிலிருந்து, இறப்பு சான்றிதழை பெற்றுக் கொள்வது வரை பல்வேறு பிரச்னைகளை மக்கள் எதிர் நோக்கி வருகின்றனர்.

அத்துடன், பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுமதிக்க சிரமப்படுகின்றமை, புலமை பரிசில்களை பெற்றுக்கொள்ள முடியாமை, சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள முடியாமை, அடையாளஅட்டையை பெற்றுக்கொள்ள முடியாமை, திருமண பதிவுகளை செய்ய முடியாமை என நாளாந்தம் பல சவால்களை இந்த மக்கள் சந்தித்து வருகின்றனர்.

அத்துடன், தமது தங்காபரணங்களை வங்கிகளில் அடகு வைத்து, அதனை மீள திருப்பிக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளமைக்கு முகவரி இல்லாமையே பிரதான காரணமாக அமைந்துள்ளது.

பெரும்பாலான மலையக தமிழர்கள், பெருந்தோட்ட நிறுவனத்திற்கு சொந்தமான காணிகளிலுள்ள லயன்களில் வசித்து வருகின்றமையினால், அவர்களுக்கென முகவரியொன்று இதுவரை வழங்கப்படவில்லை.

குறிப்பாக பெருந்தோட்ட பகுதிகளில் வாழும் ஒருவருக்கு கடிதமொன்றை அனுப்ப வேண்டும் என்றால், அந்த கடிதம் பெருந்தோட்ட நிறுவனத்திற்கு சொந்தமான அலுவலகத்திற்கே முதலில் செல்லும்.

அதன்பின்னர், அங்கிருந்து பெருந்தோட்ட மக்களுக்கு, தோட்ட நிர்வாகம் பகிர்ந்தளிக்கும் வகையிலேயே இந்த நடைமுறை அமைந்துள்ளது.

தமக்கென முகவரி இல்லாமையினால், நாளாந்தம் பல்வேறு பிரச்னைகளை எதிர்நோக்கி வருவதாக மாவத்தகம - முவன்கந்த பகுதியைச் சேர்ந்த ஹரிசந்திரன் தெரிவித்தார்.

"எங்களுக்கு வருகின்ற கடிதங்கள் எல்லாம், தோட்டத்திற்கு தான் வரும். அப்படி வரும் கடிதங்கள் ஒன்று அல்லது இரண்டு மாதங்கள் தாமதமாகவே கிடைக்கும். இதனால் பலருக்கு பரீட்சைகளை செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டது.









கடிதங்கள் கிடைக்காமையினால் தொழில்கள் கிடைக்காது போயுள்ளன. எனது மனைவி பல்கலைக்கழகத்திற்கு செல்வதற்கான கடிதம் தாமதமாக கிடைத்தமையினால், எமது மனைவிக்கான பல்கலைக்கழக சந்தர்ப்பமும் இல்லாது போயுள்ளது.

கடிதம் தாமதித்து கிடைத்தமையினால், அவரின் கல்வியும் பாதிக்கப்பட்டது. ஒரு மாதத்திற்கு முன்பு கூட, எனது மனைவியின் தங்க நகையொன்றை அடகு வைத்திருந்தேன்.

அதற்கு வங்கியிலிருந்து அனுப்பும் கடிதம் கிடைக்காமையினால், அந்த சபை ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. முன்னர் யாராலது மரணித்தால், தந்தி மூலமே அறிவிக்கப்படும். ஆனால், எமக்கு கடிதம் கிடைக்காமையினால், தந்திகள் கிடைப்பதில்லை.

அவ்வாறு கிடைத்தாலும் தாமதித்து கிடைக்கின்றமையினால் இறுதி சடங்குகளில் கூட பங்கு கொள்ள முடியாது. இப்படியான பல பிரச்னைகள் காணப்படுகின்றன. இன்று வரை எல்லாரும் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள்" என ஹரிசந்திரன் குறிப்பிடுகின்றார்.

தமக்கு 200 வருட காலமாக சரியான முகவரியொன்று இல்லாது இன்றும் வாழ்ந்து வருவதாக யட்டியாந்தோட்டை - பனாவத்தை பகுதியைச் சேர்ந்த எஸ்.பரமேஸ்வரி தெரிவிக்கின்றார்.

'200 வருட காலமாக சரியான முகவரியொன்று இல்லை. முகவரி இல்லாதமையினால் கடிதமொன்று கிடைப்பதும் மிகவும் கஷ்டமாக தான் இருக்கின்றது. பனாவத்தை என்று சொன்னால், 7 குரூப் (பிரிவுகள்) இருக்கின்றன. 7 பிரிவுகளிலும் ஒரே பெயர் உள்ள இரண்டு அல்லது மூன்று பேர் இருக்கின்றார்கள். அப்படி இருக்கும் போது, கடிதங்கள் மாறுப்பட்டு செல்கின்றன. வங்கியிலிருந்து கடிதம் வந்தாலும் சரியாக அது கிடைப்பதில்லை. தோட்டத்தில் வேலை செய்யும் நாம், நிறைய இழக்கின்றோம். வறுமை கோட்டில் தான் வாழ்கின்றோம். வீட்டிற்கு சரியாக இலக்கமொன்று கிடையாது. இந்த 200 வருட காலமாக தோட்டத் தொழிலாளிகள் இப்படி தான் வாழ்ந்து வருகின்றோம்." என எஸ்.பரமேஸ்வரி குறிப்பிடுகின்றார்.

இலங்கையில் வாழும் மலையக மக்களுக்கு நிரந்தர முகவரியொன்றை பெற்றுக்கொடுக்குமாறு கோரி, உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரினால் இந்த அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நிரந்தர முகவரியொன்றை பெற்றுக்கொடுக்க பொது நிர்வாக அமைச்சர் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு கோரியே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குருநாகல் மாவட்டம் மாவத்தகம பிரதேசத்தின் முவன்கந்த பெருந்தோட்ட பகுதியைச் சேர்ந்த ஜீவரட்ணம் சுரேஷ்குமார் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

பொது நிர்வாக அமைச்சர், பிரதமர் தினேஷ் குணவர்தன, அந்த அமைச்சின் செயலாளர், பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரண, அந்த அமைச்சின் செயலாளர், அமைச்சர் ஜீவன் தொண்டமான், அரச பெருந்தோட்ட திணைக்களம், பெருந்தோட்ட அபிவிருத்தி சபை, அமைச்சர் பந்துல குணவர்தன, சட்டமா அதிபர் உள்ளிட்ட 18 பேர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மலையக மக்களுக்கு முகவரியை பெற்றுக்கொடுக்க வேண்டும் என கோரி, உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த ஜீவரட்ணம் சுரேஷ்குமாரையும், சந்தித்து வினவியபோது:

"குறிப்பாக 200 வருட காலமாக இந்த அரச சேவை எங்களுக்கு கிடைக்கப் பெறாமையானது, அடிப்படை உரிமை மீறலாகவே நான் பார்க்கின்றேன். குறிப்பாக ஒருவரின் முகவரி என்பது அவனை அடையாளப்படுத்தும் அடையாள பொருளாகும். நாங்கள் இன்றும் முழுமையான பிரஜைகளுக்கு கிடைக்க வேண்டிய சக வாய்ப்புக்களை, சக உரிமைகளை அனுபவிக்காத சமூகமாகவே வாழ்ந்து வருகின்றோம்.

நாங்கள் 200 வருட காலம் வாழும் இந்த இலங்கை நாட்டில், நாங்கள் அபிமானம் மிக்க பிரஜைகளாக இருக்கின்றோம். எவருக்கும் நாங்கள் தாழ்ந்திருக்க வேண்டிய அவசியம் கிடையாது.

நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் ஒரு சமூகம். ஆனாலும், இந்த அரசாங்கத்தினால் வழங்கப்பட வேண்டிய பல சேவைகள் இன்றும் கிடைக்காமை என்பது மிகவும் மன வருத்தத்திற்கு ஒன்றாகும்.

நாங்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த காலம் தொட்டு, இன்று வரை இலங்கையின் பொருளாதாரத்திற்கு காத்திரமான சேவையை ஆற்றி வருகின்றோம். தேயிலை, ரப்பர், மிளகு, தென்னை இவ்வாறான துறைகளில் எங்களது முன்னோர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள்.

நாங்கள் இன்று நான்காவது தலைமுறையாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அதனால், எதிர்வரும் சமூகத்திற்கு இந்த முகவரி பிரச்னை இருக்கக்கூடாது.

முகவரி இல்லாமையினால், பல்வேறு அரச தொழில் வாய்ப்புக்கள், வெளிநாட்டு சுற்றுப் பயணங்கள், புலமை பரிசில்கள், பல்வேறு வகையான அடிப்படை வசதிகள் கூட இழந்த சமூகமாக நாங்கள் இருக்கின்றோம். இடைதரகர்களாக இருக்கின்றவர்களே இந்த கடிதங்களை வழங்குகின்றனர்.

எங்களது ஊரில் ஒரு உப தபால் அலுவலகம் இருக்கின்றது. ஆனால், அதற்கு அருகில் இருக்கும் எங்களது வீடுகளுக்கு அவர்கள் கடிதங்களை வழங்க மாட்டார்கள். தோட்ட முகாமைத்துவத்திற்கே கடிதங்களை வழங்குவார்கள். தோட்ட முகாமையாளர் அந்த கடிதங்களை எமக்கு பகிர்ந்தளிக்கின்றார்.

எதிர்வரும் காலத்திலும் முகவரி இல்லாத சமூகமாக எங்களுக்கு வாழ முடியாது. அது எங்களின் அடிப்படை உரிமை. நாங்களும் ஏனைய மக்கள் போன்று வாழ வேண்டியவர்கள்.

இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அறிவித்தோம். ஆனால் இதுவரை நியாயம் கிடைக்கவில்லை" என ஜீவரட்ணம் சுரேஷ்குமார் தெரிவிக்கின்றார். (பிபிசி)

# அக்குறணையில் அச்ச நிலைமை அரசால் உருவாக்கப்பட்டுள்ளதா?

## இம்ரான் எம்.பி சந்தேகம்

கொழும்பு, ஏப். 21

**உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை கொண்டு வரும் பின்னணியில், அக்குறணையில், அச்ச நிலைமை உருவாக்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை வாழ் முஸ்லிம்கள் புனித ரமழான் மாத நோன்பை கடைப்பிடித்து வரும் நிலையில், அக்குறணையில் மக்கள் மத்தியில் அச்சநிலை உருவாக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு தரப்பினர் உடனடியாக பாதுகாப்பை பலப்படுத்தியதை தொடர்ந்து அங்கு நிலைமை சீர்செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம் ஒரே ஒரு அநாமதேய அழைப்பு அல்லது அநாமதேய கடிதம் எந்தவொரு சமூகத்தின் விசேட நிகழ்வுகளையும் சீர்குலைக்கும் நிலைமையை நாம் அனுமதிக்கவும் கூடாது.

வலி நிறைந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நினைவை மீட்டும் நாட்களில் இப்படியான மன உளைச்சலுக்குரிய நிகழ்வுகள் நடப்பது பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பயங்கரவாத தாக்குதலின் பின்னால் பாரிய அரசியல் பின்னணி கொண்ட சதி இருந்ததாக இன, மத வேறுபாடின்றி மிகப் பெரும்பாலான இலங்கை மக்கள் நம்புகின்றனர்.

ஒரு சமூகத்தின் மகிழ்ச்சியை சீர்குலைக்கும் எண்ணம் இதன் பின்னால் உள்ளதா அல்லது ஜனநாயக விரோதமான கொடுங்கோன்மை சட்டமான உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் கொண்டுவரப்பட அரசு தயாராகும் நிலையில் அதற்கு ஏற்ற வகையிலான சமூக நிலைமையை கட்டமைக்கும் கைங்கரியம் இதன் பின்னணியில் உள்ளதா என்பதும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே இன, மத வேறுபாடின்றி எல்லா மக்களதும் பாதுகாப்பை உறுதி செய்வதும் இதன் பின்னால் உள்ள சதியை முறியடிப்பதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும்-என்றார். (அ)

# “வரிக்கொள்கைக்கான தீர்வு வரும்வரை பணிகளை ஆரம்பிக்க போவதில்லை!”

கொழும்பு, ஏப். 21

அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ள வரிகொள்கையால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு கிடைக்கும் வரை உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளை ஆரம்பிக்கப்போவதில்லை என விரிவுரையாளர்கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் சாருதத்த இலங்கசிங்ஹ இதனைத் தெரிவித்தார்.

நிரந்தர தீர்வு கிடைக்கும் வரை தற்காலிகத் தீர்வை ஏற்க தயாரில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் அரச வங்கி மூலம் பெற்றுக் கொண்ட கடன் செலுத்தலுக்காக 6 மாத நிவாரணக் காலத்தை வழங்குவதற்காக அரசாங்கத்திடம் இருந்து சிறந்த பதில் கிடைக்கப் பெற்று வருவதாக அவர் கூறினார். (அ)

# ரமழான் தந்த படிப்பினைகளை உணர்ந்து செயல்படுவோம்

## அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்



நிந்தவூர், ஏப். 21

“ஈகையின் சிறப்பை எடுத்தியம்பும் புனித ரமழான் மாதம் எம்மை விட்டுப்பிரிந்து செல்லும் நிலையில் ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் சகல முஸ்லிம்களுக்கும் பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பேருவகையடைகின்றேன்”

இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின், உயர் பீட உறுப்பினரும், அக்கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளரும், சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான ஐ.எல்.எம். மாஹிர் விடுத்துள்ள நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இந்த வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

“ரமழான் மாதம் முழுவதும் பசித் திருந்தும், விழித்திருந்தும், நல்லமல்கள் பல புரிந்து நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் மகிழ்ச்சிகரமான இந்த நந்நாளில் புனித ரமழான் நமக்கு உணர்த்திய, கற்றுத்தந்த பாடங்களை என்றும் நினைவில் கொண்டவர்களாக நம் எதிர்கால செயல்பாடுகள் அமைய வேண்டும்.

குறிப்பாக பசி, பட்டினி, வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்கித் தவிக்கும் நம் சகோதரர்களின் வாழ்வில் மறு மலர்ச்சிகள் ஏற்பட உதவுபவர்களாகவும், அவர்களது துயர் நீக்கும் செயல்பாடுகளை முன்னெடுப்பவர்களாகவும் நாம் செயற்பட முன்வரவேண்டும்.

மனித நேயம், இன நல்லிணக்கம் போன்ற பல்வேறு நற்பண்புகளை ரமழான் மாதம் நமக்கு உணர்த்தியுள்ளதை நாம் படிப்பினையாகக் கொள்ள வேண்டும்.

நாடும், மக்களும் இன்று பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி சிறிதேனும் மீண்டு வரும் நிலையில், இந்த அவலம் தொடராது நாடும், மக்களும் மீட்சி பெற இந்த நன்னாளில் இறைவனைப் பிரார்த்திப்போம்.

இஸ்லாம் எப்போதும் மனிதனால் முடியாத ஒன்றைச் செய்யும்படி சொல்வதே இல்லை, சொன்னதுமில்லை.

நாம் நற்செயல்கள் செய்வது பெரியதல்ல, அதை நாள் தவறாது தொடர்ந்து செய்வது தான் சிறப்பானதாகும்.

அல்லாஹ்வின் உவப்புக்குரிய வழிகளில் பெருநாளைக் கொண்டாடுவோம்” - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)






# தரம் 5 புலமைப்பரிசில் எழுதிய மாணவர்களுக்கு கௌரவிப்பு





அக்கரைப்பற்று, ஏப். 21

கல்முனை கல்வி வலயத்திற்கு உட்பட்ட அஸ்-ஸுஹரா வித்தியாலயத்தில் கல்வி பயின்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதிய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் புதன்கிழமை நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எம். எச். எஸ். ஆர். மஜீதியா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன் ஏனைய அதிதிகளாக பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுச் செயலாளர் எம்.ரி.எம்.அனப், பெற்றோர் தர வட்டத்தின் தலைவர் யு.எல்.எம் ஹாஜா உட்பட பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், பெற்றோர் சங்க உறுப்பினர்கள், மாணவர்கள் என கலந்து சிறப்பித்தனர்.

2022 ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 70க்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்று சித்தி பெற்ற மாணவர்களுக்கும் வெட்டுப்புள்ளிக்கு அண்மித்த-மேற்பட்ட புள்ளிகளை பெற்ற மாணவர்களுக்குமான கௌரவிப்பும் இடம்பெற்றது.

தரம் 5 பெற்றோர் தர வட்டம் அன்பளிப்பு செய்த கோப்பு அலுமாரியை பாடசாலை அதிபர் எம். எச். எஸ். ஆர். மஜீதியாவிடம் உத்தியோகபூர்மாக கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி கைளித்தார். (அ)

# வலயக் கல்விப் பணிப்பாளருக்கு கல்முனை அதிபர் சங்கம் பாராட்டு

அக்கரைப்பற்று, ஏப். 21

கல்முனை கல்வி வலயத்தில் நீண்ட காலமாக ஒரே பாடசாலையில் பத்து வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய ஆசிரியர்களுக்கான இடமாற்றம் மேற்கொள்ளப்படாதிருந்தமை கவலை அளித்தபோதிலும் அதனை துணிச்சலோடு பொறுப்பேற்று அந்த இடமாற்றத்தை புதிய வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் வெற்றிகரமாக செய்து முடித்தமையிட்டு கல்முனை கல்வி வலய அதிபர் சங்கம் பாராட்டு தெரிவித்துள்ளது.

புதிதாகப் புனரமைக்கப்பட்ட கல்முனை கல்வி வலய அதிபர் சங்கத்தின் தலைவர் தெரிவிக்கையில்-

கடந்த பத்து வருடங்களுக்கு மேல் ஒரே பாடசாலையில் 170 இற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படாமல் தொடர்ந்தும் அப் பாடசாலையிலேயே சேவையாற்றி இருந்தபோதும், கல்வி அமைச்சின் 20/2007ஆம் இலக்க தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கைக்கு அமைவாக மிகவும் துணிச்சலோடு நீண்ட காலமாக மேற்கொள்ளப்படாத அந்த இடமாற்றத்தை புதிதாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையேற்ற எம்.எஸ். சஹுதுல் நஜீம் அதனை மிக வெற்றிகரமாக எதிர்கொண்டு முடித்தமையானது கல்முனை கல்வி வலயத்தின் கல்வி வளர்ச்சியில் அவர் ஆற்றிய மகத்தான சேவையாகும்.

இது பாடசாலை வளர்ச்சியிலும் பொதுவாக கல்முனை கல்வி வலயத்தின் கல்வி வளர்ச்சிக்கும் முக்கியமான அம்சமாக உள்ளது.

ஆசிரிய இடமாற்றங்கள் வருடா வருடம் இடம் பெற வேண்டும். இதன் ஊடாகவே பாடசாலைகளின் தேவையான ஆசிரியர் பங்கீடு சீராக செய்ய முடியும். அதேபோன்று ஒரு ஆரோக்கியமான சிறப்பான கல்வி வளர்ச்சிக்கு இது துணை புரியும்-என்றார். (அ)

# அம்பாறை செயலக இப்தார்



அக்கரைப்பற்று, ஏப். 21

அம்பாறை மாவட்டச் செயலகத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வு, மாவட்ட செயலாளர் ஜே.எம்.ஏ டக்ளஸ் தலைமையில், மாவட்ட செயலக முன்றலில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

சமூக நல்லிணக்க இப்தாராக நடைபெற்ற இந்நிகழ்வில் நோன்பின் மாண்புகளை பற்றி மௌலவி முனீர் முனவர் (நளிமி) மார்க்க சொற்பொழிவு நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசீம், மண்டல மகா விகாராதிபதி சுஹதகம சீலரத்ன ஹிமிஹிரத உட்பட அரசியல் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# 100 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதி




திருமலை, ஏப். 21

புனித நோன்புப் பெருநாளை முன்னிட்டு 100 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலர் உணவு பொதிகள், வன்னி ஹோப் நிறுவனத்தினால் நேற்று முன் தினம் வழங்கப்பட்டன.

அந்த நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் எம். ரீ. எம். பாரிஸ் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நாட்டில் நிலவி வரும் பொருளாதார நெருக்கடி மற்றும் பொருட்களுக்கான விலையேற்றம் காரணமாக உணவுத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலையில் வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கு புனித நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் வகையில் உணவுப் பொதிகளை வழங்குமாறு திருகோணமலை முஸ்லிம் சிவில் சமூக அமைப்புக்கள் வன்னி ஹோப் நிறுவனத்திடம் விசேட வேண்டுகோள் விடுத்தன.

அதன் அடிப்படையில் வன்னி ஹோப் நிறுவனத்தின் அவசர கால நிவாரணச் செயற்றிட்டத்தின் கீழ், திருகோணமலை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் 100 முஸ்லிம் குடும்பங்களுக்கு முதல் கட்டமாக புனித நோன்புப் பெருநாளை கொண்டாடும் வகையில், அரிசி, கோதுமை மற்றும் சீனி போன்ற அத்தியாவசிய உலர் உணவு பொருட்கள் வழங்கப்பட்டன. (அ)

# அரசாங்கத்திற்கு அரசியல்வாதிகள் பணம் சேர்த்து கொடுக்கக்கூடாது

## சாணக்கியன் எம்.பி. கோரிக்கை

நிந்தவூர், ஏப். 21

அரசாங்கத்திற்குப் பணம் சேர்த்துக் கொடுக்கும் செயற்பாடுகளில் மக்கள் பிரதிநிதிகளான அரசியல்வாதிகள் ஈடுபடக்கூடாதென பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் குறிப்பிட்டார்.

மண்முனை பற்று தென்னருவில் பற்று பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் மக்களுக்கு நன்மைகளைப் பெற்றுத் தருவதற்கே செயற்படுத்தப்பட வேண்டும். மாறாக அவர்களுக்கு அந்தத் திட்டங்கள் பாதகமாக அமையக்கூடாது என்பதுடன் அரசியல்வாதிகள் அதற்குத் துணை போகக் கூடாது.

ஒரு பிரதேசத்தின் அபிவிருத்திக்காகக் கொண்டுவரப்படும் திட்டங்கள் மக்களுக்கு நன்மை பயக்கும்மாறே அமையவேண்டும். மக்களைச் சுரண்டி இலாபம் உழைக்கும் திட்டங்கள் எமக்குத் தேவையில்லை. எனவே அரசாங்கத்திற்கு இலாபம் உழைக்கும் திட்டங்களை அரசியல்வாதிகள் ஊக்கப்படுத்தக்கூடாது.

அதேவேளை அரசியல்வாதிகள் தமது அரசியல் இலாபம் கருதியும் குறித்த திட்டங்களை நடைமுறைப்படுத்தக்கூடாது.

இதற்குப் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் நான் எனது எதிர்ப்புக்களைத் தொடர்ந்தும் வெளியிடுவேன்.

உதாரணமாக தென்னருவில் பற்று பிரதேசத்தில் இதுவரை காலமும் முன்னெடுக்கப்பட்டு வந்த படகுப்பாதைக்கு பணம் அறவிடப்படவில்லை. ஆனால் தற்போது திடீரென மக்களிடம் 50 ரூபா பணம் அறவிடப்படுகின்றது.

நாம் பணம் அறவிட வேண்டாம் எனக் கூறவில்லை. தற்போது காணப்படுகின்ற நெருக்கடி நிலைமையின் மத்தியில் மக்களிடம் பணம் அறவிடப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. நாம் பணம் அறவிட வேண்டாம் எனக் கூறவில்லை. ஆனால் புதிய படகுப் பாதையை அமைத்த பின்னர் பணம் அறவிடுவதில் எந்தப் பிரச்னையும் எமக்கு இல்லை.

தற்போதுள்ள அந்தப் படகுப் பாதையில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன. பல வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக இந்த விடயத்தில் பாடசாலை மாணவர்களே அதிகம் பாதிக்கப்படுவார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். அதிகமாக பாடசாலை மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வோர் ஆசிரியர்கள் உள்ளிட்ட தரப்பினர் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.



இதுவரைகாலமும் இலவசமாக முன்னெடுக்கப்பட்டு வந்த இந்த படகுப்பாதை சேவைக்கு ஏன் தற்போது பணம் அறவிடப்படுகின்றது.

ஒரு சில அரசியல்வாதிகள் தமது இருப்பைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அரசாங்கத்திற்கு இலாபமுழைத்துக் கொடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகவே அமையும்.

எனவே தற்காலிகமாகவேனும் இந்தப் படகுப்பாதை விடயத்தில் பணம் அறவிடுவதை நிறுத்த வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகவுள்ளது.

இந்த விடயத்தில் அரசியல்வாதிகள் மற்றும் உரிய அதிகாரிகள் உள்ளிட்ட தரப்பினர் பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும்.

பொறுப்புவாய்ந்த அமைச்சர் மற்றும் அபிவிருத்திக்குழுத் தலைவர் என்ற வகையில் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தலையிட்டு இந்த விடயத்தில் முடிவுகளை எடுக்க வேண்டும்-என்றார். (அ-06)

# அமெ. பேட்ரியாட் ஏவுகணை அமைப்பை பெற்றது உக்ரைன்!

## பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

**கீவ், ஏப். 21**

**உலகின் மிகவும் மேம்பட்ட அமெரிக்க வான் பாதுகாப்பு அமைப்புகளில் ஒன்றாக கருதப்படும் பேட்ரியாட் அமைப்பை பெற்றுள்ளதாக உக்ரைன் கூறியுள்ளது.**

**உக்ரைன் பாதுகாப்பு அமைச்சர் இது குறித்து ருவிட்டரில் தெரிவித்துள்ளார்.**

“எங்கள் அழகான உக்ரேனிய வானம் மிகவும் பாதுகாப்பானது. ஏனெனில் தேசபக்த வான் பாதுகாப்பு அமைப்புகள் உக்ரைனுக்கு வந்துள்ளன” என்று ஒலெக்ஸி ரெஸ்னிகோவ் ருவிட்டரில் தெரிவித்தார்.

பேட்ரியாட் ஏவுகணை பாதுகாப்பு அமைப்பை உக்ரைனுக்கு அனுப்புவதாக கடந்த ஆண்டு டிசெம்பரில் அமெரிக்கா அறிவித்தது. இதை பயன்படுத்த விரிவான பயிற்சி தேவை என்பதால் சுமார் 100 உக்ரேனிய துருப்புக்கள் இந்த ஆண்டு ஜனவரியில் அமெரிக்காவில் பேட்ரியாட் ஏவுகணை பாதுகாப்பு அமைப்பில் பயிற்சி பெற்றனர்.



ஒரு பேட்ரியாட் பேட்டரி தாக்குதல் விமானங்கள், குருஸ் ஏவுகணைகள் மற்றும் சில பாலிஸ்டிக் ஏவுகணைகளை இலக்குகளைத் தாக்கும் முன்பே சுட்டு வீழ்த்தும் திறன் கொண்டது என்று அமெரிக்க பாதுகாப்புத் துறையின் செய்தித் தொடர்பாளர் பிரிகேடியர் ஜெனரல் பாட் ரைடர் கூறினார்.

# மேலும் 4,000 ஊழியர்கள் மெட்டாவில் பணி நீக்கம்

நியூயோர்க், ஏப். 21

3ஆவது கட்டமாக மேலும் 4,000 ஆயிரம் ஊழியர்களை பணிநீக்கம் செய்ய மெட்டா நிறுவனம் முடிவு செய்துள்ளது.

கொரோனா தொற்று மற்றும் உக்ரைன் போர் காரணமாக ஏற்பட்டுள்ள சர்வதேச பொருளாதார நெருக்கடியால் தொழில்நுட்ப நிறுவனங்கள் தொடர்ந்து ஆள்குறைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

அந்த வகையில் கூகுள், மைக்ரோசாப்ட், ருவிட்டர், பேஸ்புக், டிஸ்னி, அமேசான், வால் ஸ்டிரீட் உட்பட பல நிறுவனங்களும் ஆள்குறைப்பை மேற்கொண்டுள்ளன.

இதுவரை பணி நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 1 லட்சத்தை தாண்டியுள்ளது.

பேஸ்புக்கின் தாய் நிறுவனமான மெட்டா நிறுவனம் கடந்த ஆண்டு நவம்பரில் 11,000 ஊழியர்களை பணிநீக்கம் செய்தது.

அதை தொடர்ந்து கடந்த மாதம் மேலும் 10,000 ஊழியர்களை பணியில் இருந்து நீக்கியது.

இந்த நிலையில் தற்போது 3ஆவது கட்டமாக மேலும் 4,000 ஆயிரம் ஊழியர்களை பணிநீக்கம் செய்ய மெட்டா நிறுவனம் முடிவு செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு ஓரிரு தினங்களில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இது மெட்டா ஊழியர்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

(அ)

# இராணுவ உளவு செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தும் வடகொரியா!



பியொங்யாங், ஏப். 21

வடகொரியா தனது முதல் இராணுவ உளவுச் செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தவுள்ளது.

வடகொரியா-தென் கொரியா நாடுகள் இடையே நீண்ட காலமாக இருந்து வரும் மோதலால் கொரிய தீப கற்பத்தில் பதற்றம் நீடித்து வருகின்றது.

தென்கொரியா-அமெரிக்கா இணைந்து போர் பயிற்சி நடத்துவதற்கு மிரட்டல் விடுக்கும் வகையில் வடகொரியா பல்வேறு ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகின்றது.

குறிப்பாக கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை, அணு ஆயுதம் சுமந்து செல்லும் திறன் கொண்ட ஏவுகணைகளை வடகொரியா சோதனை நடத்துகின்றது.

இந்த நிலையில் வட கொரியா தனது முதல் இராணுவ உளவு செயற்கைகோளை விண்ணில் செலுத்தவுள்ளது.

இது தொடர்பாக வடகொரிய அரசாங்கம் வெளியிட்ட ஊடக அறிக்கையில்,

வடகொரியா தனது முதல் இராணுவ உளவுச் செயற்கைக்கோளை உருவாக்கி முடித்துள்ளதாகவும் திட்டமிட்டபடி அதை ஏவுவதற்கு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி கிம் ஜாங் உன் உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகள் இணைந்து முத்தரப்பு கூட்டு போர்ப் பயிற்சியை தொடங்கிய நிலையில் வடகொரியா தனது முதல் இராணுவ உளவு செயற்கைக்கோளைச் செலுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)



# நலத்திட்ட உதவிகள் வாங்கச்சென்ற கூட்டத்தில் சிக்கி 78 பேர் உயிரிழப்பு!

சனா, ஏப். 21

யேமனில் நலத்திட்ட உதவிகளை வாங்கச் சென்ற கூட்டத்தில் சிக்கி 78 பேர் உயிரிழந்துள்ளனர்.

ரமழான் மாதத்தை முன்னிட்டு அந்நாட்டு தலைநகர் சனாவில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனுடன் பணம், உணவு மற்றும் அன்னதானம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து அங்கு நூற்றுக்கணக்கானோர் குவிந்தனர். சிறிது நேரத்தில் தள்ளுமுள்ளு ஏற்பட்டதால் ஒருவர் மீது ஒருவர் தடுக்கி விழுந்தனர்.

இந்த நெரிசலில் சிக்கி 78 பேர் உயிரிழந்தனர் என ஹவுதி தலைமையிலான நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் குழந்தைகள் மற்றும் பெண்கள் எனவும் கூறப்பட்டுள்ளது.

(அ)

# கடற்கரையில் புதைக்கப்பட்டிருந்த 3 அழகிகளின் நிர்வாண சடலங்கள்!

## ஈக்குவடோரில் பெரும் பரபரப்பு



ஈக்குவடோரின் கடற்கரையில் 3 இளம் பெண்களின் நிர்வாண சடலங்கள் புதைக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மூன்று இளம் பெண்களும் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்படுவதற்கு சில மணிநேரங்களுக்கு முன்பு, அவர்களில் இருவர் ஆபத்தில் இருப்பதாகக் கூறி அன்பானவர்களுக்கு செய்திகளை அனுப்பியதாகக் கூறப்படுகிறது.

கடந்த 7ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் துர்நாற்றத்தை உணர்ந்தனர். அவர்களுடன் சென்ற நாய்கள் கடற்கரையில் நிலத்தைத் தோண்டத் தொடங்கியுள்ளன. இது குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் அங்கு வந்து நிலத்தை அகழ்ந்தபோது, ஆழமற்ற குழியில் 3 பெண்களின் உடல்களும் புதைக்கப்பட்டமை தெரிய வந்தது.

ஈக்வடோரின் குயினேட் அருகே உள்ள கடற்கரைக்கு கடந்த ஏப்ரல் 4 ஆம் திகதி டென்னிசி ரெய்னா (வயது-19), யூலியானா மாசியஸ் (வயது-21), நயேலி டாபியா (வயது-22) ஆகிய 3 இளம் பெண்கள் உல்லாச சுற்றுப்பயணம் சென்றனர்.

கடற்கரை ஓரத்தில் விளையாடிக்கொண்டு இருந்த அந்த மூன்று இளம் பெண்களையும் சில ரவுடிகள் துரத்திச் சென்றனர். இது குறித்து தங்கள் அன்புக்குரியவர்களுக்கு சமூக வலைத்தளம் மூலம் தகவல் அனுப்பினர்.

நயேலி தனது சகோதரருக்கு இரவு 11:10 மணிக்கு வாட்ஸ்அப் செய்தி அனுப்பியுள்ளார். அவரது அண்ணன் உடனே அழைப்பை ஏற்படுத்தியபோது செய்தபோது நயேலியின் கைபேசி நிறுத்தப்பட்டிருந்தது.

மற்றொரு இளம் பெண் டென்னிஸ், ‘எனக்கு ஏதோ நடக்கப் போகிறது. எனக்கு ஏதாவது நேர்ந்தால், ஐ லவ் யூ வெரி மச் என்பதை நினைவில் வையுங்கள்’ என தனது காதலனுக்கு செய்தி அனுப்பியுள்ளார்.

இந்த நிலையில் மறுநாள் 3 அழகிகளும் கடற்கரையில் அரை நிர்வாணமாகக் கொலை செய்யபட்டு கிடந்தனர். அடையாளம் தெரியாத நபர்களால் சித்திரவதை செய்யப்பட்டு, கழுத்தை அறுத்து, மணலில் புதைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கொலைகளை யார் செய்தார்கள் என தெரியவில்லை. அருகில் உள்ள சி.சி.ரி.வி கமராக்களை பொலிஸார் ஆய்வு செய்து வருகின்றனர்.

கொலை செய்யப்பட்டவர்களில் ஒருவரான நயேலி திருமணமானவர் மற்றும் ஒரு குழந்தையின் தாயாவார். இவர் பிரபல பாடகியும் கூட.

யூலியானா மேசியஸ் வேளாண் பொறியியல் மாணவி. அவர் சட்டத்துறையில் கல்வி கற்க விரும்பியிருந்தார்.

நயோலி தனது மகளுடன் ஸ்பெயினுக்கும், டென்னிசி ஒரு நண்பருடன் அமெரிக்காவுக்கும் விரைவில் குடிபெயர விரும்பியிருந்தனர்.

இந்த 3 பெண்களும் போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் தொடர்புடையவர்கள் என உள்ளூரில் பரவும் தகவலை, உயிரிழந்தசர்களின் உறவினர்களின் மறுத்துள்ளனர்.

(அ)



## ஐ. பி. எல்லில் எப்போதும் சிறந்த வீரர் லசித் மலிங்க!

### விராட் கோலி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 21

ஐ. பி. எல். கிரிக்கெட்டில் எப்போதும் மிகச் சிறந்த வீரர்கள் மலிங்க, ஏபி டி வில்லியர்ஸ் ஆகியோரே என்று பதிலளித்துள்ளார் விராட் கோலி.

தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்த சிறு நேர் காணலிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இதேபோன்று, ஐ. பி. எல். கிரிக்கெட்டில் மிகசிறந்த சகலதுறை மற்றும் சுழல் பந்துவீச்சாளர் யார் ? என்ற கேள்விக்கு , ஷேன் வற்சன் என்றும் சிறந்த சுழற்பந்து வீச்சாளர் ரஷித் கான் என்றும் விராட் கோலி பதில் அளித்தார்.

ஐபிஎல் போட்டியில் எந்த அணிக்கு எதிராக விளை யாட அதிக விரும்புவீர்கள் ? என்ற கேள்விக்கு, சென்னை சுப்பர் கிங்ஸ்தான். சென்னை அணிக்கு பெரிய அளவில் ரசிகர்கள் பட்டாளம் இருப்பதால் சென்னை அணிக்கு எதிராக ஆடுவது உற்சகமாக இருக்கும் என கோலி பதி லளித்தார்.



## டெஸ்ட் தரவரிசையில் பிரபாத் முன்னேற்றம்!

டுபாய், ஏப். 21

ஐ. சி. சியின் டெஸ்ட் பந்துவீச்சு தரவரிசையில் இலங்கை சுழல்பந்துவீச்சாளர் பிரபாத் ஜயசூரிய 13 இடங்கள் முன்னேறி 19ஆவது இடத்தைப் பிடித் துள்ளார்.

அயர்லாந்துக்கு எதிரான போட்டிக்கு முன்னர் தரவரிசையில் 32ஆவது இடத்திலிருந்த பிரபாத் ஜயசூரிய, அயர்லாந்துடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் 10 விக்கெட்களை மொத்தமாகக் கைப்பற்றியதன் மூலம் தரவரிசையில் முன்னேறி யுள்ளார்.

இந்தப் போட்டியில் தனிநபருக்கான அதிசிறந்த இன்னிங்ஸ் பெறுதியைப் பதிவு (52 - 7 விக்.) செய்த பிரபாத் 869 தரவரிசைப் புள்ளிகளை மொத்தமாகப் பெற்றுள்ளார்.

அயர்லாந்துடனான போட்டியில் 179 ஓட்டங்க ளைக் குவித்த திமுத் கருணாரட்ன, துடுப்பாட்ட வரிசையில் 9ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளார். அவர் 783 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

சதங்கள் குவித்த தினேஷ் சந்திமால், குசல் மெண்டிஸ் ஆகிய இருவரும் தரவரிசையில் முறையே 14ஆவது, 42ஆவது இடங்களைப் பெற்றுள்ளனர்.

சகலதுறை வீரர்களுக்கான தரவரிசையில் ரமேஷ் மெண்டிஸ் 32ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

பந்துவீச்சில் விஸ்வ பெர்னாண்டோ 59ஆவது இடத் திற்கு முன்னேறியுள்ளார். (ஐ)

# இறுதி ஓவரில் ஆவேஷ் கான் ஆதிக்கம் ராஜஸ்தானை வீழ்த்தியது லக்னோ!



ராஜஸ்தான், ஏப். 21

கடைசி ஓவரை மிகவும் துல்லிய மாக வீசி, ராஜஸ்தான் றோயல்ஸ் வீரர்கள் இருவரை ஆவேஷ் கான் அடுத்தடுத்த பந்துகளில் ஆட்டம் இழக்கச் செய்ததால் லக்னோ சுப்பர் ஜயன்ட்ஸ் 10 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இந்தப் போட்டியில் லக்னோ சுப்பர் ஜயன்ட்ஸ் நிர்ணயித்த 155 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தா டிய ராஜஸ்தான் றோயல்ஸ் 20 ஓவர் களில் 6 விக்கெட்களை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

இதன் மூலம் இந்த வருட ஐ. பி. எல். அத்தியாயத்தில் மிகவும் குறைந்த மொத்த எண்ணிக்கையை தக்கவைத்த அணி என்ற பெரு மையை லக்னோ சுப்பர் ஜயன்ட்ஸ் பெற்றுக்கொண்டது.

ராஜஸ்தானின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 19 ஓட்டங்கள் தேவைப்பட்டன. கடைசி ஓவரை வீசிய ஆவேஷ் கான் 3ஆம், 4ஆம் பந்துகளில் 2 விக்கெட்களை வீழ்த்தி லக்னோவின் வெற்றியை உறுதிசெய்தார். அவரின் அந்த கடைசி ஓவரில் ஓர் உதிரி உட்பட 8 ஓட்டங்களே பெறப்பட்டன.

ராஜஸ்தான் றோயல்ஸின் யஷஸ்வி ஜய்ஸ்வால், ஜோஸ் பட்லர் ஆகியோர் 11.3 ஓவர்களில் 87 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை ஏற்படுத்தினர். ஆனால், 17 ஓட்டங்கள் வித்தியா சத்தில் 4 விக்கெட்கள் சரிந்ததால் ராஜஸ்தான் றோயல்ஸ் நெருக்கடிக் குள்ளானது.

ஜெய்ஸ்வால் (44 ஓட்டங்கள்), அணித் தலைவர் சஞ்சு சாம்சன் (2), ஜொஸ் பட்லர் (40), ஷிம்ரன் ஹெட்மேயர் (2) ஆகியயோர் சீரான இடைவெளியில் ஆட்ட மிழந்தனர்.

இதனைத் தொடர்ந்து தேவ்தத் படிக்கல் (26), ரியான் பரக் (15) ஆகிய இருவரும் 5 விக்கெட்டில் 37 ஓட்டங்களைப் பகிர்ந்து லக்னோ வுக்கு சவால் விடுத்தனர்.

ஆனால், கடைசி ஓவரை வீசிய ஆவேஷ் கான் அடுத்தடுத்த பந்து களில் தேவ்தத் படிக்கல், துருவ் ஜூரெல் (0) ஆகிய இருவரையும் ஆட்டமிழக்கச் செய்து லக்னோ வின் வெற்றியை உறுதிசெய்தார்.

பந்துவீச்சில் ஆவேஷ் கான் 25 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை யும் மார்க்கஸ் ஸ்ரொய்னிஸ் 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை யும் கைப்பற்றினர்.

முன்னதாக இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ சுப்பர் ஜயன்ட்ஸ் 20 ஓவர் களில் 7 விக்கெட்களை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது.

அணித் தலைவர் கே. எல். ராகுல், கைல் மேயர்ஸ் ஆகிய இருவரும் 64 பந்துகளில் 82 ஓட்டங்களைப் பகிர்ந்து பலமான ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர். எனினும், ராகுல் (39), அயூஷ் படோனி (1), தீபக் ஹூடா (2), கைல் மேயர்ஸ் ஆகியோர் சீரான இடைவெளியில் ஆட்டம் இழந்தனர். (104 - 4 விக்)

கைல் மேயர்ஸ் 4 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 51 ஓட்டங்களைப் பெற்றார். மத்திய வரிசையில் ஓரளவு திறமையாகத் துடுப்பெடுத்தாடிய மார்கஸ் ஸ்ரொய்னிஸ் (21), நிக்கலஸ் பூரண் (29) ஆகிய இருவரும் 5ஆவது விக்கெட்டில் 45 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை நல்ல நிலையில் இட்டனர்.

பந்துவீச்சில் ரவிச்சந்திரன் அஸ் வின் 23 ஓட்டங்களுக்கு 2 விக் கெட்களைக் கைப்பற்றினார். (ஐ)

# சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டம் மன்செஸ்டர் சிற்றி அரையிறுதியில்

முனிச், ஏப். 21

பேயர்ன் முனிச் - மன்செஸ்டர் சிற்றி அணிகள் மோதிய இரண்டா வது காலிறுதி போட்டி 1 - 1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. எனினும், முந் தைய போட்டியில் மன்செஸ்டர் சிற்றி முன்னிலை வகித்ததால் அந்த அணி அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

ஐரோப்பிய சம்பி யன்ஸ் லீக் உதைபந் தாட்டப் போட்டியில் நேற்று நடைபெற்ற காலிறுதி 2ஆவது சுற்று போட்டியில் பேயர்ன் முனிச் - மன்செஸ்டர் சிற்றி அணிகள் மோதின.

இரு அணிகளும் சமபலம் வாய்ந்த அணிகள் என்பதால் இந்த போட்டிக்கு ரசிகர்கள் மத்தியில் பலத்த எதிர்பார்ப்பு ஏற்பட்டது.

முதல் பாதியில் இரு அணி வீரர்களும் கோல் அடிக்க கடுமையாக போராடியும் கோல் அடிக்க முடியவில்லை. இதனை தொடர்ந்து நடந்த 2ஆவது பாதியில் மன்செஸ்டர் சிற்றி அணியின் எர்லிங் ஹோலண்ட் ஆட்டத்தின் 57ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார். இதனால் அந்த அணி 1-0 என முன்னிலை பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் 83ஆவது நிமிடத்தில் பெனால்ட்டி உதவியுடன் பேயர்ன் முனிச் அணியின் கிம்மிச் கோல் அடித்தார். இதனால் ஆட்ட நேர முடிவில் 1-1 என சமநிலையில் முடிந்தது.

பேயர்ன் முனிச் - மன்செஸ்டர் சிற்றி மோதிய காலிறுதியின் முதலாவது சுற்று ஆட்டத்தில் மன்செஸ்டர் சிற்றி அணி 3-0 என்ற கணக்கில் வென்றிருந்தது. இதனால் இரு போட்டிகளிமாக மன்செஸ்டர் சிற்றி அணி 4-1 என்ற கோல் கணக் கில் அபார வெற்றி பெற்று அரை யிறுதிக்கு முன்னேறியது. (ஐ)



# பேஸ்புக்கில் படம் போடுவதானாலும் ரணிலைக் கேட்கும் நிலைமை வரும்!

## எச்சரிக்கின்றார் வசந்த சமரசிங்க

கொழும்பு, ,ஏப். 21

**“பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டால். பேஸ்புக்கில் படம் ஒன்று போடுவதாக இருந்தாலும் இனி ரணிலிடம்தான் கேட்கவேண்டும்” - என்று ஜே.வி.பியின் சிரேஷ்ட உறுப்பினர் வசந்த சமரசிங்க கூறினார்.**

அவர் மேலும் கூறுகையில்:-

மக்கள் ஆணை இல்லாமல் பாராளுமன்றத்தால் ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டின் சொத்துக்களை விற்பனை செய்யப்போகின்றார். அதற்கு மொட்டுக் கட்சியினர் ஆதரவு வழங்குகின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்திடம் நிதி கிடைத்தது ஏதோ வீரச் செயல்போல் நினைக்கின்றார்கள் இவர்கள். இந்த வீரச் செயலை வைத்துத்தான் தொழில்சங்கப் போராட்டங்களை அடக்குகின்றார்கள்.

அதுமட்டுமா, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டு வரப்போகின்றார்கள். பேஸ்புக்கில் படம் ஒன்று போடுவதாக இருந்தாலும் இனி ரணிலிடம்தான் கேட்க வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி கிடைத்தமைக்காகப் பட்டாசு சுடுகின்றார்கள். சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனை முழுமையாக நடைமுறைக்கு வரும்போது ரணில் - ராஜபக்‌ஷ குழு உடம்பில் பட்டாசுகளைக் கட்டிக்கொண்டு காட்டுக்குள் பாயும் நிலை வரும்.

சர்வதேச நாணய நிதியத்திடம் சென்று முன்னேறிய நாடுகள் கிடையாது. முன்னேறவும் முடியாது. இது பொருளாதாரத்தை நெருக்கும் ஒன்று. பணம் இருக்கின்றவர்கள் வாழ்வார்கள் இல்லாதவர்கள் விஷம் அறிந்து சாவார்கள்-என்றார்.

(அ)



# பாடசாலை மாணவர்களிடையே போதை ‘ரொபி’ பாவனை அதிகம்

கொழும்பு, ஏப். 21

இலங்கையில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப் பொருள் பாவனை, புகையிலைப் பொருட்கள் மற்றும் போதையூட்டும் ‘ரொபி’ பாவனை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காலி மாவட்ட சமூக விசேட வைத்திய நிபுணர் கலாநிதி அமில சந்திரசிறி மற்றும் ருஹூணு பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவின் விரிவுரையாளர் இஷார வன்னியாராச்சி உள்ளிட்ட குழுவினர் நடத்திய ஆய்வில் இது தெரியவந்துள்ளது.

தென் மாகாணத்தில் பாடசாலை மாணவர்களிடையே இதுவரை ஐஸ், ஹெரோயின் போன்ற கடுமையான போதைப் பொருள் பாவனை பதிவாகவில்லை.

எனினும் பாடசாலைகளில் தரம் 9ஆம்,10 ஆம் வகுப்புகளில் கற்கும் மாணவர்களிடையே இவ்வாறான போதைக்கு பலியாகும் அபாயம் அதிகம் என இந்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையே உள்ள தூரமும், பிள்ளைகள் மீது கவனம் செலுத்தாமல் இருப்பதுமே இந்த நிலைமைக்கு முக்கிய காரணம் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

(அ)

# புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் இலங்கை போன்ற நாடுகளுக்கு அவசியம்

## வலியுறுத்துகிறார் வஜிர அபேவர்தன

கொழும்பு, ஏப். 21

உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் போன்ற சட்டமூலங்கள் இலங்கை போன்ற நாடுகளுக்கு மிகவும் அவசியமான சட்டமூலங்களாகும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- 2018ஆம் ஆண்டு இந்த சட்டமூலத்தை அமைச்சரவைக்கு முன்வைத்தோம். இந்த சட்டமூலத்தை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கும்போது தற்போது எதிர்க் கட்சியிலிருக்கின்ற அந்த சந்தர்ப்பத்தில் அமைச்சரவையில் இருந்த சஜித் பிரேமதாஸ, லக்ஷ்மன் கிரியெல்ல, ராஜித சேனாரத்ன, அசோக அபேசிங்க, சரத் பொன்சேகா உள்ளிட்ட சகலரும் இந்த சட்டமூலத்துக்கு ஆதரவளித்திருந்தனர்.

இந்த சட்டமூலத்துக்கு தற்போது ஒரு சிலர் எதிர்ப்பை தெரிவிப்பார்களேயாயின், 2018 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டம் அதேபோன்று 2023ஆம் ஆண்டு நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட இரண்டு சட்டமூலங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டியது அவசியமாகும்.

இதில் ஏதேனும் மாற்றங்களை செய்ய வேண்டுமாயின் அது எவ்வாறான மாற்றம் என்பதை தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

இந்த சட்டமூலத்துக்கு ஆதரவளித்தவர்கள் இன்று அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பார்களாயின் எதிர்ப்பதற்கான காரணத்தை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்-என்றார்.

(அ)



# காரால் மோதிவிட்டு நிறுத்தாமல் 20 கி.மீ ஓட்டிய பொலிஸ் அதிகாரி!

கொழும்பு, ஏப். 21

குருநாகல்-தம்புள்ளை பிரதான வீதியின் தம்பகஹமுல பிரதேசத்தில் பாதசாரி ஒருவரை காரால் மோதி விட்டு நிற்காமல் தப்பிச் சென்றதாகக் கூறப்படும் நீர்கொழும்பு பொலிஸ் பரிசோதகர் ஒருவர் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு கைது செய்யப்பட்டார்.

காரில் தப்பியோடிக்கொண்டிருந்த பொலிஸ் பரிசோதகரை பொலிஸார் கைது செய்தனர்.

விபத்து நடந்த இடத்தில் இருந்து 20 கிலோமீற்றர் தொலைவில் கார் நிறுத்தப்பட்டது.

விபத்து இடம்பெற்றபோது, பொலிஸ் பரிசோதகரின் மனைவி மற்றும் பிள்ளைகளும் காரில் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

விடுமுறையில் சென்றிருந்த வேளையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# சிறு, நடுத்தரத் தொழிற்றுறைக்கு விரைவில் நிவாரணத் திட்டங்கள்

## பிரதீப் உந்துகொட எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஏப்ரல் 21

வெகுவிரைவில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் சிறு மற்றும் நடுத்தர தொழிற்றுறையினருக்கு நிவாரண வேலைத்திட்டங்களை முன்மொழிந்து நாட்டின் எதிர்காலப் பயணம் தொடர்பில் ஜனாதிபதி தீர்மானங்களை எடுப்பார் என்று நாம் நம்பிக்கை கொண்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பிரதீப் உந்துகொட தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- கடந்த காலங்களில் நாட்டில் பாரிய அரசியல் நெருக்கடி ஏற்படுவதற்கு பிரதான காரணமாக பொருளாதார நெருக்கடி அமைந்திருந்தது.

கடுமையான பொருளாதார நெருக்கடியால் பாரியளவிலான அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிட்டது.

விசேடமாக அன்றாட நடவடிக்கைகளை அவ்வாறே செயற்படுத்திக்கொள்வதற்கு மக்களால் முடியாமல் போனது.

இந்த நிலைமை தீவிமரமடைந்ததால் அரசியல் நெருக்கடிளை எதிர்கொள்வதற்கு நேரிட்டது.

இவ்வாறான நெருக்கடி நிலைமையிலிருந்து நாடு மீண்டெழுந்து வருகின்றது.

தற்போது மக்களது அடிப்படைத் தேவைகளை பெற்றுக்கொடுப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தாலும்கூட மக்கள் எதிர்பார்க்கும் நிவாரணங்களை பெற்றுக்கொடுக்க முடியாமல் போயுள்ளது என்பதை நாம் கட்சி என்ற முறையில் ஏற்றுக் கொள்கின்றோம்.

சர்வதேச நாணயத்திடமிருந்து முதல்கட்ட உதவியை பெற்றிருந்தாலும்கூட அதனூடாக மக்களுக்கு நிவாரணம் கிடைக்கின்றதா என்பது சந்தேகமாகவே உள்ளது.

நாட்டில் தற்போது வட்டி வீதங்கள் அதிகரித்துள்ளன.

இவ்வாறான நெருக்கடிகள் காரணமாக தொழிற்சாலை துறைகளை கைவிட்டுச் செல்லும் நிலைமைக்கு தொழிற்சாலை உரிமையாளர்கள் மாறியுள்ளனர்.

எனவே, வெகுவிரைவில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் சிறு மற்றும் நடுத்தர் தொழிற்றுறையினருக்கு நிவாரண வேலைத்திட்டங்களை முன்மொழிந்து நாட்டின் எதிர்கால பயணம் தொடர்பில் ஜனாதிபதி தீர்மானங்களை எடுப்பார் என்று நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

அதேபோன்று பொருட்களின் விலைகள் அதிகரித்து சென்றாலும் அரச, தனியார் துறைகளில் பணியாற்றுபவர்களுக்கு எவ்வித சம்பள அதிகரிப்பும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, அரச, தனியார் துறை ஊழியர்கள் சவால்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

எனவே எதிர்காலத்தில் அரச துறையினரை போன்று தனியார் துறை ஊழியர்களுக்கும் ஏதேனும் ஒரு வகையில் நிவாரணத்தை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்-என்றார்.

(அ-கே)

## சர்வதேச...

இந்த நிலையில், நீதி அமைச்சருடனான சந்திப்பு தொடர்பில் அமெரிக்க தூதுவர் தனது உத்தியோகபூர்வ பதிவில், "சர்வதேச தரத்துக்கு புறம்பாக இருக்கும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் அம்சங்கள் தொடர்பில் எங்களின் கவலைகளை அமைச்சருடன் விவாதித்தேன். இந்த சட்டம் தொடர்பில் பாராளுமன்ற விவாதங்களை காண வேண்டும் என்ற எங்களின் வலுவான விருப்பத்தையும் பகிர்ந்து கொண்டேன்", என்று கூறியுள்ளார். (ஐ)

## மக்கள்...

நடைமுறையிலுள்ள பயங்கரவாத சட்டத்துக்குப் பதிலாக பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தை அறிமுகப் படுத்துவதற் கான நோக்கம் சாதாரண மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத் துவதற்காகவே ஆகும். மனித உரிமைகள் மீறப்படுவதற்கான சந்தர்ப்பம் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தில் நீக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்தால் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்து வதற்கும் பொருளாதாரத்தைக் கட்டியெ ழுப்புவதற்கும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை பாராட்டிய அமெரிக்க தூதுவர், பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறுகிய காலத்துக்குள் மீண்டெழுவதற்கான கட்டத்தை அடைந்துள்ளமைக்கு மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தியுள்ளார் - என்றும் கூறப்பட்டிருந்தது.

## தேசிய...

தெரிவித்தார்.

சிறீலங்கா பொதுஜன பெரமுன பணிமனையில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், உரிமைகளுக்காக போராடும் தரப்பினர் தங்களின் கடமைகளை மறந்து விடுகிறார்கள். உயர்தர பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளில் இருந்து விலகியுள்ள தரப்பினர் தங்களின் அடிப்படை கடமைகளை மறந்துவிட்டதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கோவிட் பெருந்தொற்று தாக்கத்தால் வீழ்ச்சியடைந்த கல்வி நிலை தொழிற்சங்க போராட்டங்களால் மேலும் பாதிக்கப்பட்டுள்ளது. கல்வி சேவையில் ஏற்படும் பாதிப்பை குறுகிய காலத்திற்குள் சீர் செய்ய முடியாது என்பதை தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடும் பேராசிரியர்கள், கலாநிதிகள் நன்கு அறிவார்கள். தங்கள் சுயநல தேவைகளுக்காக மாணவர்களின் எதிர்காலத்தை சவாலுக்குட்படுத்துவது கவலைக்குரியது.

தேசிய அரசாங்கம் தற்போது பிரதான பேசுபொருளாக உள்ளது. பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண தேசிய அரசாங்கத்தை அமைக்க வேணடும் என்ற நிலைப்பாட்டை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தோற்றுவித்தார். தேசிய அரசாங்கம் பொருளாதார நெருக்கடிக்கு ஒரு தீர்வாக அமையுமாக இருந்தால், அதனை முழுமையாக ஏற்போம்.

கட்சி என்ற ரீதியில் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறோம்.சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து அமைக்கும் தேசிய அரசாங்கம் நல்லாட்சி அரசாங்கத்தின் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய அரசாங்கத்தை போல் அமைய கூடாது.

நல்லாட்சி அரசாங்கத்தில் ஜனாதிபதி,பிரதமர் ஆகிய இருவருக்கும் இடையில் காணப்பட்ட அதிகார போட்டித் தன்மை மீண்டும் தோற்றம் பெற கூடாது என்பதில் உறுதியாக உள்ளோம். தேசிய அரசாங்கத்தில் பொறுப்புக்கூறும் தரப்பு ஓர் அதிகாரத்தை மையப்படுத்தியதாக காணப்பட வேண்டும் - என்றார். (ஐ)

## பயங்கரவாத சட்ட...

தரப்பினரையும் நாம் ஒன்றிணைத்துக் கொண்டிருக்கின்றோம். பாராளுமன்றத்திலும் இந்த சட்ட மூலத்தை தோல்வியடைச் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுப்போம்.

மக்களின் உரிமைகளை இல்லா தொழிப்பதற்கே அரசாங்கம் அனைத்து சந்தர்ப்பங்களிலும் முயற்சித்து வருகிறது. ஒருபுறம் தேர்தலை நடத்துவதை அரசாங்கம் தடை செய்துள்ளது. தேர்தலுக்கு நிதி வழங்குவதை இடை நிறுத்தியுள்ளது. மறுபுறம் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் பயங்கரவாத சட்டத்தை நடைமுறைப்படுத்த முயற்சிக்கப்படுகிறது.

இதே நிலைமை தொடருமானால் நாட்டில் சர்வாதிகார போக்கு தலைதூக்கும். மக்கள் ஆணையுடன் பெற்றுக் கொள்ள முடியாத அதிகாரத்தை, பல வந்தமாகப் பெற்றுக் கொள்வதே ஜனாதிபதியின் ஒரே இலக்காகும். இதற்கு இடமளிக்க நாம் தயாராக இல்லை. நாட்டிலுள்ள அனைத்து சக்திகளையும் ஒன்றிணைத்து மக்களின் உரிமைகளை முடக்கும் முயற்சிகளை முறியடிப்போம் - என்றார்.

## உயிர்த்த...

நேரமான காலை 8.45 மணிக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்படவுள்ளது. அத்துடன், அமைதிவழி போராட்டங்களும் இடம்பெறவுள்ளன.

இதனிடையே, உயிரிழந்தோருக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நீதி கோரி பேரணி ஒன்றும் நடைபெறவுள்ளது. தாக்குதல்கள் நடைபெற்ற கடுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயத்தில் இருந்து கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயம் வரை இந்தப் பேரணி நடைபெறவுள்ளது.

கடந்த 2019 ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கடுவாப்பிட்டி, கொச்சிக்கடை, மட்டக்களப்பு தேவாலயங்கள் மற்றும் கொழும்பின் நட்சத்திர விடுதிகளில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களில் 272 பேர் கொல்லப்பட்டனர். 500இற்கும் மேற்பட்டவர்கள் காயங்கள் - அவயவங்கள் இழப்புக்கு உள்ளாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நினைவுதினமான இன்று நாடு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், தேவாலயங்களிலும் பொலிஸார், இராணுவத்தினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். (ஐ)

## இந்தியாவை...

இந்த சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

கடந்த 15ஆம் திகதி பாக்கு நீரிணை கடலில் இந்தியாவின் பாம்பனிலிருந்து 13ஆவது கடல் மைல் தொலைவில் புறா ஒன்று வந்தமர்ந்தது. இந்தப் புறாவை மீட்ட மீனவர்கள் அதன் கால்களில் ஒருவரின் பெயரும் கைபேசி இலக்கமும் எழுதப்பட்டிருந்ததையும் சீன எழுத்து மற்றும் இலக்கம் பொறிக்கப்பட்டிருப்பதையும் அவதானித்தனர். அத்துடன், அந்த புறாவின் காலில் வளையம் ஒன்றும் இருந்ததாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில், பாக்கு நீரிணை பகுதியில் இந்திய கடற்படை ரோந்து கப்பலின் நடமாட்டம், கடல் பாதுகாப்பு குறித்து உளவு பார்க்க சிறிய ரக கமெராவை புறாவின் காலில் கட்டி அனுப்பப்பட்டிருக்கலாம் என்று தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனிடையே, யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர் என்று கூறப்படும் புறாவின் உரிமையாளர் அது தன்னுடைய புறா என்றும். பந்தயத்துக்காக அனுப்பப்பட்டதாகவும் பந்தய இலக்கமே அதில் பொறிக்கப்பட்டுள்ளதாகவும் இலக்கத் தகடு சீனாவில் உற்பத்தி செய்யப்படுவதால் சீன எழுத்துகள் காணப்படுகின்றன என்றும் கூறியுள்ளார்.

# பொலிஸ் வாகனத்துக்கு தீ வைப்பு; மூவர் கைது!

கொழும்பு, ஏப். 21

கடந்த வருடம் மே 9 ஆம் திகதி மருதானை - பஞ் சிகாவத்தை பிரதேசத்தில் காவல் துறை வாகனத்தை தாக்கி உதிரி பாகங்களை அகற்றி தீ வைத்த சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் வணிகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற் கொள்ளப்பட்ட விசாரணையைத் தொடர்ந்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

18, 31 மற்றும் 46 வயதுடைய சந்தேகநபர்கள் மாளி காவத்தை மற்றும் கொழும்பு - 12 ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களெனபொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# நாட்டில் அதிகூடிய மின் தேவை நேற்று முன்தினம் பதிவாகியது!



கொழும்பு, ஏப். 21

அண்மைக் காலங்களில் இலங்கையின் நாளொன்றுக்கான அதிகூடிய மின்சார தேவை நேற்று முன்தினம் பதிவானதாக மின்சக்தி மற்றும் எரி சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நேற்று முன்தினம், தேவைக்கு ஏற்ப நிகர மின் உற்பத்தி 49.53 கிகாவோட்டாக பதிவானதாக நேற்று ருவிட்டரில் பதிவில் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், நேற்றுக் காலை பதிவு செய்யப்பட்ட உண்மையான தேவையின்படி, நேற்று மின் உற்பத்தி 50 கிகாவோட்டை தாண்டும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்படி, அண்மையில் நிறுவப்பட்ட அம் பாந்தோட்டை, டீசலில் இயங்கும் மின் பிறப்பாக்கிகள் உட்பட இலங்கை மின்சார சபையின் அனைத்து அனல் நிலையங்களும் மின் உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் என அமைச்சர் உறுதியளித்தார். (அ)

# மிளகாய் தூள் எறிந்து பணம் கொள்ளையிட்டவர்கள் கைது

கொழும்பு, ஏப். 21

அத்துருகிரிய பகுதியில் கோழி இறைச்சி வர்த்தகர் ஒருவரின் கண்கள் மீது மிளகாய் தூள் எறிந்து பணத்தை கொள்ளையிட்ட பெண்கள் இருவர் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வர்த்தகருக்கு சொந்தமான பாரவூர்தியின் சாரதி, வர்த்தகரின் மனைவி மற்றும் பிறிதொரு பெண் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

வர்த்தகர் மற்றும் சந்தேக நபர்கள் மூவரும் பாரவூர்தியில் பயணித்துக் கொண்டிருக்கையில் இயற்கை உபாதை கழிப்பதற்காக வாகனத்தை நிறுத்திய சந்தர்ப்பத்திலேயே வர்த்தகருக்கு மிளகாய் தூள் எறியப்பட்டுள்ளது.

அத்துடன் வர்த்தகரிடமிருந்து கொள்ளையிடப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட ஒரு இலட்சத்து 86 ஆயிரத்து 500 ரூபாய் பணம் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## இந்திய...

போதனா மருத்துவமனையில் இந்த மருந்தின் பாவனை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக மூத்த மருத்துவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த சொட்டு மருந்தைப் பயன்படுத்திய மூவர் தொற்றுக்கு இலக்கானமை உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்தே இந்த மருந்து பாவனையை இடைநிறுத்தி சுகாதாரப் பிரிவு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. (ஐ)

## பயங்கரவாத...

பட வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் வலியுறுத்தினர்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தின் திரு கோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட் டங்களிலும் கவனவீர்ப்பு போராட்டங்கள் நடத்தப்பட்டன. (ஐ)

## சஜித்தை...

அவர் மேற்கண்டவாறு கூறினார். அத்துடன், இந்த தருணத்தில் நாட்டின் நலனுக்காக கட்சி அரசியலுக்கு பதிலாக மக்கள் அரசியலை நாட வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

## பாராளுமன்ற...

நோக்கிலும் எதிர்க்கட்சிகள் இந்த விவாதத்தை தவிர்க்கலா மெனக் கூறப்படுகின்றது.

இந்த ஒப்பந்தத்தின் தமிழ் மொழி பெயர்ப்பை தருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கை தமிழரசு கட்சி என்பன கோரின. இதேபோன்று, சிங்கள மொழிபெயர்ப்பை ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட சில கட்சிகள் கோரியிருந்தன.

ஆனால், அரசாங்கத்துக்கும், சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையிலான ஒப்பந்தம் தொடர்பான ஆவணத்தின் ஆங்கில வடிவமே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடுமையான நிபந்தனைகளை சாதாரண மக்கள் அறிந்து விடக்கூடாது என்ற நோக்கத்துடன் அரசு சூழ்ச்சிகரமாக இவ்வாறு செயல்படுகிறது என்றும் இதன்போது எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டின. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# ஈஸ்டர் தாக்குதல் 4 ஆம் ஆண்டு; இன்று காலை இரு நிமிட அஞ்சலி

## கொச்சிக்கடையில் அமைதிப் போராட்டம்

கொழும்பு, ஏப். 21

**ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்று நான்கு வருடங்கள் நிறைவடையவுள்ள நிலையில் இன்று வெள்ளிக்கிழமை அதனை நினைவு கூர்ந்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அனைத்து மக்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.**

ஈஸ்டர் தாக்குதல் சம்பவங்களில் முதலாவது குண்டுவெடிப்பு இடம்பெற்ற காலை 8:45 மணி முதல் இரண்டு நிமிடங்களை மௌன அஞ்சலிக்காக செலவிடுமாறு அவர் மக்களைக் கேட்டுள்ளார்.

குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டி இன்று கொழும்பு - நீர் கொழும்பு வீதியில் அனைத்து மக்களினதும் பங்கேற்புடன் அமைதியான ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இன்று காலை 8:30 மணி முதல் 09 மணி வரையிலான அரை மணி நேர காலத்தில் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் இருந்து இரண்டாவது குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் ஆலயம் வரை வீதியின் இரு மருங்கிலும் மக்கள் அணி திரண்டு அமைதியான ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்பதற்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார். (அ)




# படை வசமுள்ள நிலங்களை விடுவிக்க கோரி போராட்டம்

## வடக்கு மாகாண ஆளுநருக்கும் மகஜர்

யாழ்ப்பாணம், ஏப். 21

யுத்தம் முடிவுற்று 13 வருடங்கள் கடந்தும் வடக்கில் இதுவரை விடுவிக்கப்படாமல் பாதுகாப்புப் படையினரிடமுள்ள பூர்வீக நிலங்களை விடுவிக்குமாறு கோரி நேற்று யாழ்ப்பாணத்தில் போராட்டம் ஒன்று இடம்பெற்றது

அத்தோடு, வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளரிடம் மகஜர் ஒன்றும் நேற்றுக் காலை கையளிக்கப்பட்டது.

வடக்கு மாகாண பெண்கள் குரல் அமைப்பு மற்றும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் ஆகியன இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

குறிப்பாக முல்லைத்தீவில் 5,886 ஏக்கருக்கு மேற்பட்ட நிலமும், மன்னாரில் 654 ஏக்கருக்கு மேற்பட்ட நிலமும், கிளிநொச்சியில் 1,345 ஏக்கருக்கு மேற்பட்ட நிலமும் யாழ்ப்பாணத்தில் 4,450 மேற்பட்ட மக்களின் நிலங்களும் இதுவரை படையினரால் விடுவிக்கப்படவில்லை என அந்த மனுவில் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கையளிக்கப்படாத நிலங்களை மக்களின் பாவனைக்கு உடனடியாக விடுவிக்குமாறும் அவர்கள் கோரிக்கையை முன்வைத்துள்ளனர். (அ)

# மின்சாரம், குடிதண்ணீர் கேள்வி அதிக வெப்பத்தால் அதிகரிப்பு!

கொழும்பு, ஏப். 21

அதிக வெப்பத்துடனான வானிலை காரணமாக, மின்சாரம் மற்றும் குடிதண்ணீர் என்பனவற்றுக்கான கேள்வி அதிகரித்துள்ளது.

தற்போதுவரையில், நீர் பாவனையானது, 10 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக, நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இது குறித்து தகவல் வெளியிட்டுள்ள அந்தச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் என். யு. கே ரணதுங்க, இலங்கை முழுவதும் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். நீரை அனைவருக்கும் வழங்குவதற்கான முகாமைத் துவப் பணிகள் இடம்பெறுவதுடன், தற்போது தடையின்றி விநியோகம் முன்னெடுக்கப்படுகிறது.

எனினும், மக்கள் நீரை வீண் விரயம் செய்யாமல், தமது நுகர்வுக்காக பயன்படுத்துமாறு நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் என்.யு.கே ரணதுங்க கூறினார். (அ)

# இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட கண் மருந்து பயன்பாடு இடைநிறுத்தம்

கொழும்பு, ஏப். 21

இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட கண் சொட்டு மருந்து பயன்பாடு இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு நாட்டின் அநேக வைத்தியசாலைகளில் இந்த சொட்டு மருந்து பயன்படுத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் நுவரெலியாவில் இந்த வகை மருந்தை பயன்படுத்திய நோயாளி ஒருவருக்கு பக்க விளைவுகள் ஏற்பட்ட காரணத்தினால், மருந்து பயன்பாடு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அரச மருந்தக கூட்டுத்தாபனத்தினால் இந்த வகை மருந்து இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# முட்டைக்கு விலை நிர்ணயம்!

கொழும்பு, ஏப். 21

முட்டைக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயித்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நிறையின் அடிப்படையில் முட்டைகளை விற்பனை செய்வதற்கான அதிகபட்ச சில்லறை விலையும் குறித்த வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஒரு கிலோ கிராம் வெள்ளை முட்டையின் அதிகபட்ச சில்லறை விலை 880 ரூபாயாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ கிராம் சிவப்பு முட்டையின் அதிகபட்ச சில்லறை விலை 920 ரூபாய் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வெள்ளை நிற முட்டை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 44 ரூபாயாகவும், சிவப்பு நிற முட்டை ஒன்றின் சில்லறை விலை 46 ரூபாயாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நாணய நிதிய உடன்பாடு மீதான விவாதத்துக்கு திகதிகள் நிர்ணயம்

கொழும்பு, ஏப். 21

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி தொடர்பான பாராளுமன்ற விவாதத்துக்கான திகதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் நடைபெற்ற கட்சித்தலைவர்கள் கூட்டத்தின்போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் 25 முதல் 28 வரை பாராளுமன்றம் கூடவுள்ளதுடன், சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கை தொடர்பான விவாதம் எதிர்வரும் 26ஆம், 27 ஆம், 28 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

அத்துடன், குறித்த விவாதத்தின் மீதான வாக்கெடுப்பை எதிர்வரும் 28 ஆம் திகதி நடத்துவதற்கும் கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

# இலங்கைச் சிறுவர்கள் ஐரோப்பாவுக்கு கடத்தல்!

## மலேசிய பொலிஸாரால் முறியடிப்பு

கோலாபம்பூர், ஏப். 21

மலேசிய கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இலங்கையின் சிறுவர்களை ஐரோப்பாவுக்கு கடத்தும் குழு ஒன்றின் முயற்சியை மலேசியப் பொலிஸார் முறியடித்துள்ளனர்.

மலேசியாவின் குடிவரவுத் திணைக்களம் கடந்த புதன்கிழமை கோலாலம்பூரில் உள்ளூர் தம்பதியரை கைது செய்ததன் மூலம் இந்த விடயம் வெளியாகியுள்ளது.

'பஹ்னு இன்டர்நஷனல்ஸ்' எனப்படும் நிறுவனம், 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களைக் கொண்ட ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மலேசியப் பெற்றோரைப் பயன்படுத்தி இந்த செயற்பாட்டை மேற்கொண்டு வந்துள்ளது.

குறித்த நிறுவனத்தின் செயற்பாட்டின்படி, ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பெற்றோர்கள் தங்கள் சிறுவர்களுக்கு மலேசிய கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வதைப் போன்று குடியகல்வு அலுவலகத்துக்கு அவர்களின் பிறப்புச் சான்றிதழ்களுடன் வருமாறு கூறப்பட்டுள்ளது.

எனினும் குடிவரவுப் பிரிவில் விண்ணப்பிக்கும் செயல்முறையின் போது, கைரேகைகள் மற்றும் புகைப்படங்களைப் பெறுவதற்காக, குறித்த மலேசியப் பெற்றோர், தமது பிள்ளைகளின்



வயதை ஒத்த இலங்கைச் சிறுவர்களையே அங்கு அழைத்து வந்துள்ளார்கள்.

இதன்போது குறித்த மலேசியக் கணவனும் மனைவியும் இலங்கையின் சிறுவர்களை மலேசியக் கடவுச்சீட்டு மூலம் ஐரோப்பாவுக்கு அழைத்துச் செல்லும் வகையில் அங்கு செயற்படுவார்கள்.

சம்பந்தப்பட்ட இலங்கைப் பிள்ளைகளுக்குப் பயன்படுத்துவதற்காக குடிவரவு அலுவலகத்துக்கு தமது பிள்ளையின் ஆவணங்களுடன் வருகை தருவதற்கு மலேசிய பெற்றோருக்கு 500 ரிங்கிட் வரை கொடுக்கப்பட்டதாக மலேசிய தேசிய செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில், மலேசிய கடவுச்சீட்டு செய்து ஐரோப்பாவுக்கு அழைத்துச் செல்லப்பட்ட ஒவ்வொரு இலங்கைச் சிறுவர்களுக்கும் குறித்த மோசடி நிறுவனம், 30,000 யூரோ முதல் 50,000 யூரோ வரை கட்டணமாக மலேசிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் எவ்வளவு காலம் இந்த நிறுவனம் செயல்பட்டு வருகிறது மற்றும் எத்தனை சிறுவர்கள் இதில் இதுவரை ஈடுபடுத்தப்பட்டனர் என்பதைக் கண்டறிவதற்கான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் இலங்கை சிறுவன் ஒருவருக்கு மலேசிய கடவுச்சீட்டைப் பெறுவதற்காக ஒரு மலேசிய தம்பதியினர் கோலாலம்பூர் குடிவரவுத் திணைக்களத்திற்குச் சென்றபோது இந்த மோசடி கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த இலங்கை சிறுவனுக்கு மலாய் மொழி பேசத் தெரியாத நிலையில், பாதுகாவலரின் தோற்றத்தில் கணிசமான வித்தியாசம் இருந்ததால், சிறுவனை நேர்காணல் செய்யும்போது ஏதோ குளறுபடி இருப்பதைக் கவனித்த கடவுச்சீட்டுப் பிரிவின் குடிவரவு அதிகாரிகள் தம்பதியினரை கைது செய்தனர்.

37 மற்றும் 26 வயதுடைய தம்பதியினரே கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.